www.padippakam.com

தை. 1990



தமிழீழ விடுதலைப் புலிகள்
டென்மார்க் கிளைக்கு
சுதந்திரமாக இயங்க
அரசு அனுமதி கிடைத்தது.

வெளியீடு: தமிழீழ விடுதலைப்புலிகள் கிளை டென்மார்க்.

படிப்பகம்

www.padippakam.com

Liberation Tigers Of TAMIL EELAM

# தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க் கிளைக்கு சுதந்திரமாக இயங்க அரச அனுமதி கிடைத்தது.

இவ்வாண்டு உலகம் இருபதாம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்திற்குள் அடியெடுத்து வைக்கிறது.

உறுதியும், தீர்க்கதரிசனமுமிக்க போராட்ட வழிகாட்டலால், தமிழீழ விடுதலைப் புலிகள் வெற்றிப் பாதையை நோக்கி விரைவாக பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் -

இங்கு டென்மார்க்கில், பாலஸ்தீன விடுதலை இயக்கம் போல, அங்கீகரிக்கப்பட்ட விடுதலை இயக்கமாக, சுதந்திரமாகச் செயற்பட, தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க் கிளைக்கு சுதந்திரமாக சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைத்துள்ளது. நிக்கரகுவா, அல்ஜீரியா, பாலஸ்தீனம், போன்ற நமது பரந்துபட்ட நடவடிக்கைகளை கிளைக்கான சுதந்திரப் பாதையை திறந்து விடப்பட்டுள்ளது மகிழ்ச்சிகரமான செய்தி.

ஏனைய மேலைத்தேய நாடுகளும் உலகின் தலைசிறந்த விடுதலை இயக்கங்களில் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகள்! என்று வாயளவில் கூறுவதோடு நின்றுவிடாது; தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வமான அங்கீகரிக்க வேண்டுமென்பதே நமது வேணவா.

தாயகம் —

படிப்பகம்

www.padippakam.com

# தாயகம்

மலர்: 15 தை: 1990.

## ஆசிரியர் அரங்கு.

இந்தியக் கூலிப்படைகள் தமிழீழத்தின் மீதான தமது ஆக்கிரமிப்பு அடிகளை விலக்கிக்கொண்டு, படிப்படியாக விலகத்தொடங்கியுள்ளனர்.

இந்தியக் கூலிகள் விலகியபின் என்ன நடக்கும்..?

இது சிலருடைய பதற்றமான கேள்வி.! மட்டக்களப்பு, அம்பாறை, ஆகிய பகுதிகளிலிருந்து .ஆக்கிரமிப்பாளர் விலகியதும்அப் பகுதிகளை தமிழீழ விடுதலைப்புலிகள் கூலி இராணுவத்தினருடன் - மோதி தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர். அங்குதற்போது பூரண அமைதி நிலவுகிறது.

துரோகிகளும், கைக்கூலிகளும் வாலைச்சுருட்டி வாயில்போட்டுக்கொண்டு, தமிழகத்திலுள்ள இராமேஸ்வரம், கொட்டப்பட்டுமுகாம்களில் புகலிடம் தேடி ஓடிக்கொண்டிருக்கின்றனர். மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவம் விடுதலைப்புலிகளின் அனுமதிபெற்றே வெளியேவருகிறது. தமிழீழத்தின் முழுப்பரப்பும் விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் வரும். இதில் மாற்றமில்லை.

தற்போது ஈழத்தில் இந்திய இராணுவத்திற்குக் கிடைத்துள்ள தோல்வி ஸ்பானிய நாட்டின் வரலாற்றில் நடந்த ஒரு சம்பவத்தோடு பெரிதும் பொருந்துகிறது. ஒருகாலத்தில் ஐரோப்பியக்கண்டத்தில் ஈடுஇணையற்ற வல்லரசாக ஸ்பானியா திகழ்ந்தது. 'ஆர்மெடா' என்ற அவர்களுடைய பிரமாண்டமான கடற்படையை உலகில் யாருமே வெற்றிகொள்ள முடியாதளவிற்கு வல்லமைபெற்றிருந்தனர். அந்த இராட்சதக் கடற்படைப்பிரிவு அக்காலத்தில் உலகை பெரிதும் அச்சுறுத்தியது.

இந்த ஸ்பானிய ஆதிக்கத்தை முறியடிக்க சிறு அளவிலானகப்பல்களைத் தயாரித்து, மின்னல் வேகத்தில் அவர்களைத்தாக்கி அழித்து மறைந்தனர் பிரித்தானியர். இந்த தாக்குதல்களைச் சமாளிக்கமுடியாத 'ஆர்மெடா' கடற்படை நாளடைவில் சிதைந்து அழிந்தது. அத்துடன் எழுச்சிபெற்றிருந்த ஸ்பானிய அரசின் பொற்காலமும் நிறைவு பெற்றது.

இது வரலாறு-


இன்று இந்தியா என்ற பிரமாண்டமான படைப்பிரிவுக்கு எதிராக வேகமான, சிறுசிறு அளவிலான அதிரடிப்படைப்பிரிவுகளை ஏவி ஆர்மெடா கடற்படையைப் போல இந்திய இராணுவத்தை விடுதலைப்புலிகள் ஆட்டங்காணச்செய்துவிட்டனர்.

பகைவன் சர்ப்பவியூகம் அமைத்தால், அதைவெற்றிகொள்ள கருடவியூகம் அமைக்கவேண்டும் என்று கூறுகிறது யுத்தசாஸ்திரம். – நமது மண்ணிற்கேற்றவாறு வியூகங்களை வகுத்து, போராடி வெற்றி கண்ட விடுதலைப்புலிகளைப்பார்த்து உலகமே மூக்கில் விரலைவைக்கிறது. மறுபடியும் ஸ்ரீலங்காஅரசு குள்ளநரித்தனத்தில் இறங்கினால் – மறுபடியும் அவர்கள் பாடம்படிக்க நேரிடும். விடுதலைப்புலிகள்அடைந்துள்ள இந்த வெற்றியானது ஈழத்தமிழனுக்குமட்டுமல்ல உலகமெல்லாம் பரந்துள்ள ஆறுகோடி தமிழனுக்குமே பெருமை.

ஆனந்தச் சேவல்கள் எங்கும் கூவின, அடிமை உணர்வுகள்அந்தகாரம் போயின, மௌனம்தவிர்ந்தது, சுதந்திர சூரியன் உதித்தனன்–என மலரும் ஆண்டில் ஈழத்தமிழனின் வெற்றிக்குரல் வானைப்பிளக்கும்..!

ஆம்.! நண்பர்களே இந்தியப்படை விலகியபின் இதுதான் – ஈழத்தில் நடக்கும்.

– தாயகம் –




# புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்!!

---

அடுத்த இதழில்...



நகைச்சுவை நாடகம்.


கூடிப்போ இல்லை நடிப்போ....?
பிரேமதாச.
EROS
EPRLF
TELO
ENDLF
31-12-1989
இந்தியப்படை வெளியே
ற்றக் கடைசித் திகதி...



# குறள் தரும் பாடம்.



இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

திருக்குறள் அருத்துப்பால் 448

அரசாட்சி செய்யும் ஒரு மன்னனுக்கு நல்லறிவு கூறும் மந்திரிகளின் வழி நடக்கவேண்டிய அவசியத்தை இக்குறள் வலியுறுத்துகிறது. நீ செய்வது தவறு, என்று தவறான பாதையில் – போகும் ஆட்சித்தலைவனுக்கு அவனது குறைகளை இடித்துக்காட்டக் கூடிய பொருத்தமான ஆலோசனைகளை சொல்வபர்கள் இல்லையானால் அவனை அழிப்பதற்கு எதிரிகள் என்பவர்கள் வேண்டியதில்லை அவனுடைய அரசு தானாகவே அழிந்து நிர்மூலமாகும் என்று இக்குறள் வலியுறுத்துகிறது.

முன்னால் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் ஆட்சி முறைக்கு இக்குறள் பெரிதும் பொருத்தமுடையது. விமான – மோட்டியாக இருந்த இவர் இந்திராகாந்திக்கு மகன் என்ற ஒரே ஒரு தகுதியுடன் ஆட்சிபீட்மேறியவர். அரசியலுக்கு இவர் ஒரு கத்துக்குட்டி என்பதனால்தான் இந்திரா மூத்தவரானஇவ–

றைவிடுத்து, இவரது தம்பியாகிய சஞ்சய் காந்தியை முன்னர் அரசியலுக்கு அறிமுகம் செய்தார். சஞ்சய் காந்தியின் மர்மமரணமும், இந்திராவின் படுகொலையில் உள்ள ஊழல்களும் ராஜீவ்காந்தியின் பதவியேற்றத்திற்கு பட்டுக்கம்பளம் விரித்ததென இன்று சில இந்தியப்பத்திரிகைகள் கண்சிமிட்டுகின்றன. இது எப்படியோ சீக்கியப் பிரச்சனையை அணுகியமுறை போபோர்ஸ் ஊழல், பொம்மைகளைப்போல அமைச்சர்களை மாற்றம் செய்வது, நேபாளஉறவில் விரிசல், தமிழீழ மண்ணில் ஒரு பொம்மையரசை உருவாக்கி இந்தியாவின் முகத்தில் கரிபூசியது, ஈழத்தின் ஆக்கிரமிப்பு அலங்கோலங்கள், என இவரது இமாலயத்தவறுகள் சரியானபாதையை அடையாளம் காட்டும் ஆலோசகர்கள் இவரைச்சூழ இல்லை என்பதை தெளிவாகக்காட்டுகின்றன.

தவறுகளை சரியான இடத்தில் சுட்டிக்காட்டும் பார்த்தசாரதி, வெங்கடேஸ்வரன் போன்றவர்களை உதறித்தள்ளி ஆமாம்சாமி போடும் ஊழல்பேர்வழிகளை, தாளக்காறரை ஆலோசகர்களாக வைத்திருந்தமையால் உண்மைகளைச்சுட்டிக் காட்ட யாருமே இருக்கவில்லை. பூனைக்கு மணிகட்டுவது யார்? காங்கிரசில் உள்ள அனைவருமே எலிகள் அதனால் பெருக்கல்வேகத்திலேயே தவறுகளை நிகழ்த்தியவண்ணம் சென்றார் ராஜீவ்காந்தி.

மீகாமான் இல்லாத மரக்கலமானது இவரது அரசு


இலங்கையில் இவருக்கு கிடைத்த அடி இவரது ஆட்சிக்கு விழுந்த முதல் அடி...!

இன்று ஈழத்தில் இந்தியப் படைக்கு ஆயிரம் ஆயிரம்இடி.!

எப்படியோ அழிப்பவர் இல்லாவிட்டாலும் காந்தியின் அரசு அழிவுப்பாதையின் விளிம்பிற்கே வந்து இன்று குப்புற விழ்ந்துவிட்டது.

திருவள்ளுவரின் இந்த ஆட்சியியல் போதனை தமிழிலிருப்பதால் இவர் இதைப் படித்திருக்க நியாயமில்லை. ஆயினும் திருக்குறளின் பல பகுதிகள் வடநூல்கருத்துக்களையும் தழுவியுள்ளது, எனவே மேற்கண்ட குறள்விளக்கம் வடமொழியிலும்இருக்கிறது அட இதையுமா இவர் படிக்கவில்லை.!?

பாவம் ராஜீவ்காந்தி..



ரூபா 500 =
பரிசுக்கான
ஒப்பாரிப் போட்டி
விபரம் 15ம் பக்கத்தில்

# நெய் முறுக்கு

முத்துலட்சுமியின் முகத்தில் வழமைக்கு மாறாக வியர்வைத் துளிக்கள். ராசமுசன் துரை — நிமிடத்திற்கொருதடவை நினைவில் தோன்றி சிரித்துக்கொண்டிருந்தார்.

டெனிஸ்காறரும் மற்றவர்களும் அவரை 'ராஸ்முஸ்' என்று சாதாரணமாக் கூறிக்கொள்வர்.! ஆனல் தெரஞ்சவெள்ளைக்காறரை அவர்களின்பெயருடன் துரையும் சேர்த்து அழைத்துக்கொண்டால் அதுவே முத்துலட்சுமிக்கு ஒரு ஆத்ம திருப்திதான்.

அந்தச்சிறிய நகரத்தில், சுமார் இருபதுவரை தமிழ்க்குடும்பங்கள் டெனிஸ்காறருடன் தோழமையுடன் இருப்பதற்காக சங்கமொன்றை நாளைக்கேற்றி தொடக்கிவைக்கவிருக்கிறார்கள்.

ஒருசுண்டு அவித்த கோதுமை மாவு..!

அரைச்சுண்டு உழுந்துமாவு

கால் சுண்டு கடலைமாவு

என்று நாலு கிராம்.

சி. சீரகம், மிளகுதூள், உப்பு மனதிற்குள் சமையல்புத்தகத்தை ஒரு தடவைவாசித்துப்பார்த்துக்கொண்டாள்.

ஊருக்கு ஊர் முறுக்குகளின் தரம் வேறுபடும்.! ஆனலும் — முறுக்கில் ஸ்பெஷல் முத்துலட்சுமிதான்.!

"ம்.. சிமியகொட்..!"

"ம்.. சிமியடைலி...!"

முறுக்கை டெனிஸ்காறர் — ஒடித்து, ஒடித்து சுவைக்கும்அழகு இருக்கிறதே.! ஸ்ரீலங்கா ரீ.வீயில் மெதுமையான லக்ஸ் சோப் விளம்பரம் பார்த்தது போல அந்த அழகைப்பார்த்து சிலிர்த்துப்போவாள் அவள்

நாளைய கூட்டத்தில் அவளுடைய வாழ்க்கைத்துணைவரான சுந்தரத்தாரைத்தான் நெலர பேராளராக (உபதலைவர்) தெரிவதாக ஏற்பாடு.

"உந்தமனிசன் ஒரு நிமிஷம் வீட்டிலையென்டு இருக்குதே? அவ்டியாலை வந்தகையோடை வெளியாலை ஓடியிட்டார்.!" அவள் அலுத்துக் — கொண்டாள்.

பிளாஸ்டிக் சட்டியில் குழைத்த முறுக்குமா பொன்னிறமாக ஒளிகாட்டியது.

போனமுறை ஒரு "கொண்டாக் பமிலி" கூட்டம் நடந்தபோது சீனட்டி மாணிக்கத்தின்ர பெண்சாதி கடலைவடை

www.padippakam.com



சுட்டவ. உறைப்புப போடா-
மல் வெங்காயத்திலை உள்ளை
ப்போட்டு சுட்டுக்கொண்டுவந்
தவ எல்லா டெலிசுக்காறரும்
" ஸ்மியகொட்.!" என்டுதா
ன் புழுகின்வை.

"இந்தமுறை முறுக்காலை ஒரு நல்லபேர் எடுத்துப்போடவேணும்.!" முத்துலட்சுமி- தனக்குள் ஒரு முடிவெடுத்துக்- கொண்டாள்.

பெல்லடிக்கும்சத்தமில்லை-

பூட்டியிருந்த வாசல்கத- வை யாரோ திறக்கும் சத்தம்கேட்டது.! பாலசுந்தரத்- தார் பரபரப்பாக நுழைந்து கொண்டிருந்தார்.

"பக்கத்து வீட்டுக்குப் - போறதெண்டாலும், பூட்டித்திறப்பெடுக்காமல் விடமாட்டிய- ளே.!"

"என்னப்பா? கோவமா- இருக்கிறீர்போலை?"

"இல்லையப்பா.! உந்த முறுக்குச்சட்டியைப் பார்த்தியளெண்டால் நான் விருவிறெண்டு புளிஞ்சுபோடுவனே?"

"அடஉதே? எங்கை அந்த என்ணைக்கறுத்தையை எடு.! பாலசுந்தரத்தார் பக்குவமாக- முறுக்குகளை என்ணைச்சட்டியிலிருந்து எடுத்து வைக்கத்தொடங்கினார்."

"என்னப்பா சுவரிலைஎறிஞ்சபந்துபோலை போனகைக்- யோடை திரும்பியிட்டியள்?"

"அந்தச் சீலம்பாயையேன்ப்பா கேக்கிறீர்? நாளைக்கு நடக்க இருக்கிற கூட்டத்திலை சங்கத்திற்கு ஆர் தலைவன்.? ஆர் செயலாளரெண்டு பிரேரிக்க, ஆமோதிக்க நாலுபேரை செற்பண்ணவேணுமேயப்பா, —



படிப்பகம்

www.padippakam.com

அது தான் உவன் ஈசனை ஒரு ஓட்டம ஓடிப்போய்ப் பாத்துப்போட்டுவந்தனான்.!"

"யா..யா..செல்புல்லி அவள்பெரிதாக ஆமோதித்துக் கொண்டாள்.!

இஞ்சரணை அந்தமுறுக்கி-லை ஒண்டெடுத்துக் கடிச்சுப்-பாருங்கோவன்.!"

"நாசங்கட்டு உந்தமுறுக்குசுட்டால் வீடுமுழுவதும்புகை மூடியிடுமப்பா.!" அதப்புடன் பாலசுந்தரத்தார் இரண்டுமுறுக்குகளுக்கு மோட்சம் கொடுத்தார்.!

"கொஞ்சம் உப்புப்போதாது போலை கிடக்கப்பா!"

ஒருகணம்தான் முத்துலட்சுமியின் முகம் சுண்டிவிட்டது.! "எங்கடை ஆக்களுக்கு ஒருஇங்கிதம் தெரியாதப்பா..' டெலிசுக்காறரைப் பாருங்கோ! என்ன கோதாரியெண்டாலும், ஸ்மியகொட் என்டு சொல்லுவினம். போனமுறை மாணிக்கத்தின்ரை அவ சுட்ட அந்தக்கல்லுவடையைக்கூட ஸ்மியகொட்என்டு செல்லிச்சினம்.! உங்களைப்-போய்க்கேட்டன்பாருங்கோ!

# யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு!




யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு தம்முடன் விடுதலைப்புலிகளும் இணைய வேண்டும் என்று கேட்டுள்ளது.!

பத்திரிகைச்செய்தி

"கோபிக்காதையுமப்பா போனஇடத்திலை ஒரு செய்தி கேள்விப்பட்டனான்.! அந்தநினைவிலை என்னவோ வாதடுமாறி சொல்லிப்போட்டன்.! சும்-மா சொல்லக்கூடாது முறுக்கிலை நெய்வாசம் தூக்குதப்-பா.! மொறுமொறண்டு எல்-லாம் என்ரை செல்லத்தின்ரை கைவிசேஷம்தான்.!"

முத்துலட்சுமியின் முகத்தில் மறுபடியும் வல்லிபுரக்கோயில் தாமரை மலர்ந்தது.

"ஏனப்பா.! என்னவோ பிரச்சனையெண்டியள்?"

"அதுவந்து...வந்து... இந்தியன் ஆமிசுட்டு ஊரிலைகன சனம் செத்துப்போட்டுதாம்.

"எங்கை எங்கடை ஊரி-லையோ? "

"ஓமெண்டுதான கேள்வி! கொழும்பிலையிருந்து கொஞ்சம்முந்தித்தான் போன் வந்த-தாம் உவன் ஈசன்தான் சொன்னவனப்பா.!"



படிப்பகம்

www.padippakam.com

"ஊரெண்டவுடனே உங்களு க்குக் கவலை வந்துவிடுமே.?

"அட நீயொண்டு ஊரும்— உலக்கைக் கொழுந்தும்.! உந் தச் செய்தி கேட்டஉடனேஅவ ன் ஈசன் சிலவேளை சங்கக்கூ ட்டத்திற்கு வராமல் விட்டுவிடு வானெண்டுதான் பயமாக்கிடக்கு

அவன்தானேயப்பா எல்லாப்பி- ரேரணையளையும் ஆமோதிக்க- வேணும்.!"

எனை இப்ப பீ.பீ.சியை ப்போடனை.! நேரம் ஐஞ்சு மணி.! உப்ப செய்தியிருக்குஎல் லாம் விபரமா சொல்லுவன்— நான் சுட்டமுறுக்குகளை அடுக் கிறன்.!"

பாலசுந்தரத்தார் அறை க்குள்போய் றேடியோவை — கறகற வென சுழற்றுகிறார்.

முத்துலட்சுமியின் நினைவில் மறுபடியும் ராசமுசன்றரை.. டென் கித முறுக்கு.? ம்.., ஃமியடைவி..ம்..ஃமிய கொட் ...ம்.! அவள் வண்ணமாகமு றுக்குகளை அடுக்கத்தொடங்கு கிறாள்.

பாலசுந்தரத்தார் வேக மாக அறைக்கதவைத்திறந்த- படி, குசினிக்குள் மறுபடியம்பிர வேசிக்கிறார்.., அவர் முகத்தி ல் மகிழ்ச்சி ரேகைகள்.!

"என்னப்பா பீ.பீ.சியி- லை சொன்னவங்களோ? எந்த ஊரிலையாம்.?"

"அது எங்கடை ஊரிலை- இல்லையாம்ப்பா.! பக்கத்தி- லை அல்லைப்பிட்டியிலையாம்!"

"அப்பாடி எங்கடைஊர்— தப்பினது எவ்வளவோ நல்ல— தாப்போச்சு.! அப்ப ஈசன் நாளைக்குக் கூட்டத்திற்கு வரு வானெண்டுறியள்.!"

"ஓ.! பேஷா.! இனிப் பயமில்லை நான் ஓடிப்போய் ஈசனட்டை விஷயத்தைச்சொ ல்லிப்போட்டு வாறனப்பா!!"

"கெதியா ஓடுங்கோ.! அதுசரியப்பா எத்தினைபேரை யாம் சுட்டவங்கள்.?"

"எழுவத்தி ஐஞ்சுபேரை- யாம்.!"

அவளுடைய முகத்தில் ஒரு வித ஆச்சரியம், "பெம்மகல்பி யால்? இன்டைக்கு எல்லாம்— எழுபத்தியைந்து நம்மர்தானப் பா.!"

"என்னப்பா சொல்லுறீர் பாலசுந்தரத்தார் வாசற்கத வைத்திறந்தபடியே கேட்டார்"

சொல்லிவைச்சாப்போ- லை இன்டைக்கு நாங்கள் சுட் டிருக்கிற முறுக்கும் சரியாஎழு வத்திஐஞ்சுதானப்பா.!"

"எழுவத்திஐஞ்செண்டால்? ஏழும் ஐஞ்சும் பன்னிரெண்டு,— பன்னிரெண்டெண்டால் ரெண்டும் ஒண்டும் மூண்டு.! அங்கை செத் தாக்கள் எழுவத்திஐஞ்சு அதுவ ம் மூண்டாம் நம்பர். இன்டைக் கு திகதியைக் கூட்டினால் அதுவ ம் மூண்டாம் நம்பர்.! விஷ மில்லாமலே அவங்கள் நம்பர் சாத்திரத்தை எழுதினவங்கள்! பாலசுந்தரத்தார் நம்பர்சா த்திர பெருமையை எண்ணி ஒரு திடவை மெய்சிலிர்த்துக்கொண் டார்.!


"அங்கை அவங்கள் ஆக்க ளைச்சுடுறாங்கள் இங்கை நீங்க ள் முறுக்குகளை சுட்டுத்தள்ளுங் கோ.!" என்று மனைவியைசெ



படிப்பகம்

www.padippakam.com

## வித்தியாசமாய் நடப்பாரா....? வி.பி.சிங்.



V.P. Singh

இந்தியாவின் புதிய பிரதமராக திரு.வீ.பீ.சிங் அவர்கள் தற்போது பதவியேற்றுள்ளார். இலங்கைப்பிரச்சனையில் இந்தியாவின் அணுகுமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவேண்டுமென விடுதலைப்புலிகள், டென்மார்க் கிளையினர் இவரைத்தந்திமூலம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ராஜீவ்காந்தியின் அணுகுமுறைகளின் தவறுதல்களைப்புரிந்துகொண்டே இந்திரா காங்கிரசிலிருந்து வெளியேறியவர் சிங். முழுப்பூசினிக்காயை சோற்றில் புதைத்தாலும்புதைக்கலாம் ஆனால் காந்தியின் தோல்விக்கு தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இந்திய இராணுவம் கண்டதோல்வியே பிரதான காரணமென்பதை - மட்டும் யாரும் மறுக்கமுடியாது. இலங்கைப்பிரச்சனையில் சிங் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடருவதே அவரின் எதிர்கால அரசியலுக்குச் சிறப்பானபடிக்கட்டுக்கள் என்று சர்வதேசநாடுகளிலிருந்து தந்திகள் பறந்தவண்ணமுள்ளன.

## நெய்...

லமாகக் கடிந்துகொண்டு,- "என்ன பொருத்தம்..ஆகா..!என்ன பொருத்தம்.!" என்றபாடலுடன் பாலசுந்தரத்தார் ஈசன் வீட்டுப்பக்கமாக ஓடுகிறார்.

(யாவும் கற்பனை.)



## ஓட்டம்...



அம்பாறை மட்டுநகர்ப் பகுதிகளிலிருந்து [illegible]காக்கூலிகள் பொதுமக்களின் சொத்துக்களை சூறையாடிக்கொண்டு ஓட்டம்பிடிக்கத் தொடங்கியுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# கற்பிழக்கவில்லை..!



பலாத்காரத்தால் என் – உடலை
உருக்குலைத்த இந்தியனே.!
நான் கற்பிழக்கவில்லை – ஏனெனில்
கற்பு மனதோடு பின்னியிருக்கிறது.
நீ பற்களைப் பதித்ததால் – நான்
தூக்குப் போடவில்லை.!
ஏனென்று கேள்...? – உனக்காக
ஒரு தூக்குக்கயிறை
திரிக்க வேண்டிய கடமை – இன்று
எனக்காக காத்திருக்கறது.
வேட்டை நாயே.! உன் – குருதியில்
ஈழம் நனையும்போது,
என்காயங்கள் ஆறும் – ஆயினும்
நான் கற்பிழக்கவில்லை.!
ஏனென்று கேட்கிறாயா...? – கேள்,
கற்பு மனதோடு பின்னியிருக்கிறது.

இராஜநாயகம்



படிப்பகம்


www.padippakam.com

# ஈரோஸ்
## வேஷங்களும் சதிகளும்.!

ஈரோஸ் இயக்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நண்பர்களா? அல்லது இந்தியப்படையின் தோழர்களா? அல்லது பாம்புக்கு வாலும் கீரிக்குத் தலையும் காட்டும் பேர்வழிகளா? என்பது தமிழ்மக்களிடையே நிலவிவந்த நீண்டகாலக் குழப்பங்களில் ஒன்று.

இலங்கையில் ஓர் அமைதியை ஏற்படுத்தாத இந்தியஅமைதிப்படை நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது என்று கேட்டுக்கொண்டதன் மூலமும், பாராளுமன்றப் பதவிகளை ஏற்று, கூட்டணியின்வார்த்தைஜால புரட்டு அரசியல்வழிபோய் தற்போது தமது புரட்சிகரப் போர்வையை இழந்துவிட்டமையும் தற்போது ஈரோஸ் அமைப்பை சாயமிழந்த குழுவாக்கிவிட்டது.

சில ஈரோஸ் பேர்வழிகள் இங்கு வெளிநாடுகளில், விடுதலைப்புலிகளுக்கு கொடுக்கப்படும் பண உதவிகள் ஈழத்தில்உயிர்க் கொலைக்கே பயன்படுமென்று பிரச்சாரம் செய்துவருகின்றனர். இவர்களின் இந்த மதப்பிரச்சாரம் முந்தைய தேர்தலில் வாக்களித்து ஏமாற்றமடைந்த சிறுதொகை மக்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இவர்கள் இப்போது ஈழத்தில் பாலமும் பள்ளிக்கூடமும் கட்ட நிதி சேர்க்கிறார்களாம்.. வெளிநாடுகளில் போலிச்செய்திகளைப்பரப்பி மக்களைக் குழப்பத்திலாழ்த்தும் இவர்-





படிப்பகம்

www.padippakam.com

கள் குறித்து, தாயகத்தில்காலத்திற்குக்காலம் திட்டவட்டமானகட்டுரைகள் வெளிவந்துள்ளன. 1986 ஆகஸ்ட் மாதம் தாயகத்தில் வெளியான கட்டுரையொன்றின் ஒருபகுதியை இங்குதருகிறோம்:

" தமிழீழத்திலிருந்து மேற்படிப்புக்கென்று சென்ற பணக்கார வீட்டு மாணவர்கள் சிலரால் இங்கிலாந்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்த ஈரோஸ் இயக்கம். அப்பொழுது அவர்களினது பெயர் ஈழஆய்வு நிறுவனம் என்பதாகும். இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டதால் இவ்வியக்கத்திற்கு தமிழீழத்தில் எதுவித தொடர்பும் இருக்கவில்லை. இக்காலகட்டத்தில் தமிழீழ மண்ணில் தியாகி சிவகுமாரனின் வீரமரணமும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட துரோகிகள் அழிப்பு, போலீசார் மீதான அதிரடித்தாக்குதல்கள், இங்கிலாந்திலுள்ள தமிழ்மக்கள் மத்தியில் பிரபலமாகப் பேசப்பட்டது அந்தநேரத்தில் மேற்படி சம்பவங்கள் யாராலும் உரிமைகோரப்படவில்லை இது இங்கிலாந்தில் இருந்த ஈரோஸ் பேர்வழிகளின் எண்ணங்களுக்குச் சாதகமானது.


## அமைதிப் படையால் இறந்த மக்கள் தொகை இருபத்தையாயிரம்...! அந்த ஈரோஸ் எவ்வாறு சாதிக்கிறது ஏன்...?

தமிழீழத்தில் நடைபெற்ற துரையப்பா ஒழிப்பு, சி.ஐ.டிகளான கருணாநிதி, சண்முகநாதன், பஸ்தியாம்பிள்ளை குழுஒழிப்பு போன்றவற்றை தாங்களே புரிந்ததாக புலுடைகளைப் புகையவிட்டுத் திரிந்தனர், நிதியும் திரட்டினர். இவர்களின் இந்தக் குருவிச்சைப்புத்திக்கு (குருவிச்சை தனியாக வளராது மற்றய மரங்களில் படர்ந்து, அவற்றின் உணவை உண்டு செழித்து வளரும்.) - ஆப்புவைக்க எண்ணி 1978ம் ஆண்டு 25ம் திகதி மேற்படி இந்த அரசியல் தண்டனைகளை துரோகிகளுக்குத் தாங்களே வழங்கியதாக விடுதலைப்புலிகள் உத்தியோக பூர்வமாக அறிவித்தனர் - மேலும் இத்தண்டனைகளுக்கு வேறுயாரும் உரிமைகோரினால் அவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்படும் எனவும் அறிவித்தனர்...!! மேற்கண்டவாறு தாயகத்தில் எழுதியிருந்தோம்.

எங்கேயாவது ஒரு பொந்தில் ஒரு குண்டுவெடித்தால் ? அதற்குயாராவது உரிமைகோராவிட்டால் அது ஈரோஸ்தானென மேதாவித்தனமாக புலுடிகிளப்பித்திரியும் பிரகஸ்பதிகள் மேலே-



படிப்பகம்




இந்தியப்படை
வெளியேறினால்
தமிழ் மக்களுக்கு
பாதுகாப்பில்லை.

— ஈ. ரோஸ் -

நாடுகளில் ஆங்காங்குஉண்டு. இப்போது ஈரோஸ் பா.உக்கள்இந்
தியப்படை வெளியேற்றம் தொடர்பாக வெளியிடும் துரோகத்த
னமானகருத்துக்கள் அவர்களால் உரிமைகோரப்பட்டே வெளிவரு
கிறது ஈரோஸ் துதிபாடும் நண்பர்களே.! ஈரோசின் இரட்டை
வேடத்தை புரிந்துகொள்ள உங்களுக்கு இது ஒரு அரியசந்தர்ப்ப
மென்பதை புரிந்துகொள்ளுங்கள்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

## ஆத்திசூடி!

அமைதிப்படையின் படு
கொலைகளை:



பார்க்காதே!

ஆல்இன்டியா ரேடியோ
செய்திகளைக் கேட்பதை:



கேட்காதே!

இந்தியப்படையின் புகழை:



ஊரத்துப்பேசு!

ஆக்கம்; மாகாணமுதல்வர் பெருமாள்.

புலிப்படையிலே என்னஇருக்கு அவர்கள் இந்தியப்படையை தாக்கிவிட்டு, ஓடிஒழிந்துவிடுகிறார்கள். சில தமிழர்கள் உங்கள்- ஏன் இப்படி அடிக்கடி பேசிக்கொள்கிறார்களா? அப்படியானால் அவர்களிடம் ஜே.வி.பி பற்றி கொஞ்சம் பேச்சுக்கொடுத்துப்பாருங்கள், அவர்கள் ஜே.வி.பி [illegible] என்றெல்லாம் [illegible] ராக்கிறான்.! அவர்கள் வளர்ந்த [illegible] ஜே.வி.பி தாக்கிவிட்டு- படிப்பார்கள். இந்த நேரங்களில் ஜே.வி.பி ஒருபோதும் பேசமாட்டார்கள். மறைவாக [illegible] அது வளர்ச்சி.! அதுவும் தமிழ இது என்?

சிங்களவன் போராடினால் அது [illegible] இவர் க்போராடினால் அது [illegible] களும் தமிழர்களா?

ஆம் தமிழர்கள்தான்.

இவர்கள் ஜே.வி.பி தமிழர்கள்.




500 ரூபா பரிசு!

## ஒப்பாரிப் போட்டி.!



EPRLF அல்லது TELO துரோகிகளை நம்பி ஆயுதமேந்தி, தற்போது இந்திய இராணுவத்தால் கைவிடப்பட்ட அனைத்து துரோகக்குழுக்க-ளாலும் கைவிடப்பட்ட ஒரு கைக்கூலி திருகோணமலை அகதி முகாமிலிருந்து தனது ஆசையெல்லாம் நிராசையானதாக கூறி ஒப்பாரி வைப்பதாகக் கற்பனை செய்து ஒப்பாரியை எழுதியனுப்புங்கள். முதற் பரிசு: 500 ரூபா. கடைசித்திகதி 15.02.1990.

www.padippakam.com

இலக்கிய அரங்கு:




— கே.எஸ்.துரை —

வீரத்தின் கொடுமுடி எது? சங்ககாலப்பாடல்களில்தான் தமிழர் வாழ்வில் எதிர்பார்க்கப்பட்ட வீரத்தின் எவரெஸ்ட்-தெரிகிறது. இதற்குப்பிற்பட்டகாலங்களில் வீரர்கள் பலர் தோன்றியிருப்பினும்? சங்ககால வீரத்தின் எல்லையை தொட்டா[illegible] [illegible]. விடுதலைப்புலிகள் காலத்தில்தான் சுமார்-2000 ஆண்டுகளுக்குப்பிறகு அந்த வீரவரலாறு திரும்புகிறது! என்ற உண்மையை இக்கட்டுரை சங்கப்பாடல்களின் ஆதாரங்களுடன் விளக்குகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கமென்பது இன்று உலகத் தமிழர் வரலாற்றில் உன்னதமான காவியம். இந்திய - இராணுவத்தையும் இலங்கை இராணுவத்தையும், கைக்கூலிக்-குழுக்களையும் தனியாக எதிர்கொண்டு வீரத்தமிழர் வரலாற்றிற்கு முத்தாரம் வைத்திருக்கிறார்கள், தமிழினத்தின் தாரகைகளான வீரவேங்கைகள். பண்டைத்தமிழர் வரலாற்றின் பக்கங்களை நாம் புரட்டுவோமானால் விடுதலைப்புலிகளின் காலத்தில்தான் நமது வீரவரலாறுகள் மறுபடியும் திரும்பிக்கொண்டிருப்பதைக்காணலாம். இன்றைய வரலாற்றிலிருந்து நாம் விடுபட்டு பண்டைத் தமிழர் வரலாற்றினை நோக்குவோமாயின் அங்கு காதலும் வீரமும்தான் முழுச்சமூகத்தையும் நெறிப்படுத்திய சாதனங்களாக தொழிற்பட்டுள்ளன. இந்த இரண்டு அச்சுக்களையும் தழுவியே அன்று தமிழர் வாழ்வு பின்னப்பட்டிருந்ததாக சங்கப்பாடல்கள் கூறுகின்றன.



படிப்பகம்

## சங்கப் பாடல்கள் என்றால் என்ன?

இற்றைக்கு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்கள் எப்படி வாழ்ந்தனர் என்பதை இயற்கையாகவே விளக்கிக் கூறுவனவே சங்கப்பாடல்கள். இரண்டாயிரம் ஆண்டுகள் என்று காலநீதியாக எல்லையிடப்பட்டாலும்கூட இதில்வரும் பல பாடல்கள் அதற்கும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மக்களால் ஊர்கள்தோறும் மரபுவழியாக பாடப்பட்டுவந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயிரக்கணக்கான இந்தப்பாடல்களையெல்லாம் ஒன்று திரட்டி இரண்டு தொகை நூல்களாக வகுத்தனர் இதை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று அழைப்பார்கள். இந்த இரண்டுபகுதிகளிலும் அடக்கப்பட்டுள்ள நூல்களில் விடயரீதியாக இரண்டு பிரதான பிரிவுகள் உள்ளன அதில் ஒன்று அகத்திணை இது காதல் வாழ்வுபற்றிக் கூறுவது, மற்றயது புறத்திணைவீரம் போன்ற புறவாழ்வுபற்றிக் கூறுவதாகும்.


## வீரவாழ்வின் சின்னங்கள்

அன்று காலநிலைக்கு ஏற்றவாறு தமிழர்வாழும் பிரதேசங்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இந்த நிலத்தில்வாழும் மக்கள் ஒவ்வொருவரும் சூழ்நிலைக்கேற்றவாறு போரில் ஈடுபடவேண்டியதேவை இருந்தது. போரில் வெற்றிபெற்றதும் அதற்கு அடையாளமாக உழிஞை, தும்பை, வஞ்சி, வாகை, வெட்சி என தத்தமது நிலத்தில் உள்ள பிரதான மலர்களை இவர்கள் சூட்டிக்கொண்டனர். (கிரேக்க நாகரீகத்தில் ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றிகொள்பவர்கள் ஆரம்பகாலங்களில் ஒலிவ் இலையிலான முடியைச் சூட்டிக்கொள்வதைப்போல.)

இவ்விதம் ஐவகையான மலர்களை தமிழர்கள் வெற்றியின்பொருட்டு சூடிக்கொண்டனராயினும், "வாகை "என்றசொல்லே வெற்றியோடு பெரிதும் தொடர்புபட்டு இன்றும் "வெற்றிவாகை சூடினர் "என்ற சொல்லே பெரிதும் வழக்கிலிருப்பதைக்காணலாம். இதில் வாகை என்பது நெய்தல் நில மககள் போரில் வெற்றிபெற்றதும் அணியும் கொடியாகும. கடலும் கடற்கரையும் சூழஉள்ள இடம் நெய்தல் நிலமெனப்படும். இதுபோல பாலைநிலப்போரும் கொடூரமானதே.!

சங்கப்பாடல்களிலே நெய்தல்நிலப்போர்க்காட்சிகள் நிறையவே வருகின்றன. பகைவருடன் மோதிய நெய்தல்நிலவீரன் ஒருவன் பகைவன் வீசிய ஈட்டியை கண்இமைக்காது அப்படியே மார்பில் ஏந்தி வீரமரணம் அடைந்ததாக ஒரு பாடல் வருகிறது. அந்த ஈட்டியானது மார்பை அண்மித்தபோது அவன் கண்-

களை இமைக்காமலே அந்த ஈட்டியை ஏந்தி வீரமரணமடைகி-றன். காரணம் அவன் கண்களை இமைத்துவிட்டால் அது அவனது வீரத்திற்கு இழுக்கு என்பதால் அப்பழுக்கில்லாத வீரத்தோடு அவன்தனது வாழ்வை முடிக்கிறன். இத்தகைய மாசற்ற வீரத்தை நாம் இந்தப்பண்டைய வரலாறுகளின் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளிடமே இன்று நேரடியாகக்காண்கிறேம்.




குழந்தை இறந்தபடியே பிறந்தாலும், அதைப்புதைக்கும் போது அதன் மார்பில் வாளால் ஒருதடவைவெட்டிவிட்டே பண்டையதமிழர்கள் புதைத்தார்கள். மேலும் இன்று ஒருவர் படித்துப் பட்டம்பெற்றால் அவர்களுக்கு கிடைக்கும் பட்டங்களைப்போல, அன்று போர்க்களத்தில் ஒருவர் எத்தனை வீரக்காயங்களை (விழுப்புண்களை) ஏற்றிருக்கிறர். என்பதைப்பொறுத்தே அவர் சமூகத்தில் உயர்வாக மதிக்கப்பட்டார். அந்தவகையில் வீரமென்பது தமிழர்களின் வாழ்வில் சகலவகையிலும் ஈடிணையற்ற நி-றைவுபெற்றிருந்தது.

## பாண்டியன் நெடுஞ் செழியனின் குரூரப் போர்

புறநானூறு என்ற நூலில் அடுகளம் வேட்ட வடுபோர்ச்செழியன் என்ற பாண்டியனின் போர்க்களக்காட்சியொன்று-விபரிக்கப்படுகிறது. இதில் வரும் போர்க்களக்குரூரம் புலிக்கொடிபறந்த சோளர் காலத்தில் பாடப்பட்ட கலிங்கத்துப்பரணியில் உச்சம்பெற்றதாக இலக்கிய ஆய்வாளர் சொல்வர்.

பகைவர்களின் வெட்டப்பட்ட தலைகளை மூன்று மூலைகளில் நாட்டி அடுப்பாகவும், கபாலமாகிய மண்டையோட்டைபாத்திரமாகவும், சதைகளையும் நிணங்களையும் கறியாகவும், தோள்களை துடுப்பாகவும் கொண்டு தளாவியஉணவால் அவன் போர்க்களயாகம் நடாத்தினன்என பாண்டியன்செழியனின் குரூரப் - போரை மாங்குடி மருதனர் என்ற புலவர் பெருமான் பாடியுள்ளார். இப்பாடல்களானது பண்டைத்தமிழனின் மாசற்றவீரத்தை

www.padippakam.com



எடுத்துக்காட்டும் நமது வீரகாவியங்களாகும். இவை இறப்புக்களையும், இரத்தங்களையும் கண்டு கண்ணீர்விட்டுப் பின்வாங்காத தமிழரது வீரப்பண்பைச் சித்தரிக்கின்றன. அழிவுகளுக்காக அஞ்சி - கண்ணீர்விட்டுப் பின்வாங்காத தமிழரது வீரப்பண்பையே காட்டுகிறது. அழிவுகளுக்காக அஞ்சி இலட்சியத்திலிருந்து பின்வாங்காத அதேமாசற்றவீரம் இன்று மறுபடியும் விடுதலைப்புலிகளிடம்தான் சுடர்விட்டுப்பிரகாசிக்கிறது.




புறநானூற்றில் 74 வது பாடல் சேரமான் கணைக்கால் இரும்பொறை என்ற மானம் நிறைந்த வீரனைப்பாடப்படுவதாகவருகிறது. செங்கணான் என்னும் அரசனோடு திருப்போர்ப்புறமென்ற இடத்தில் ஏற்பட்டபோரில இவன் சோழனால் கைதுசெய்யப்படுகிறான். சிறையில் அவன் தண்ணீர்கூட அருந்தாது உண்ணா நோன்பை மானமுடன் மேற்கொள்ளுகிறான். உயிர்பிரியும்நேரத்தில் தாகம் அவனை வாட்டுகிறது. அவனது உலர்ந்த நாவுக்காக சிறைக்காவல் வீரன் சிறிது தண்ணீரை ஒரு பாத்திரத்தில் விட்-



படிப்பகம்

டுக்கொடுக்கிறன். அந்தநேரத்தில் அவனது மனதில் உண்டானஎண்ணங்களை இருபாடல் கூறுகிறது, இதை இலகு தமிழில் இப்படிக்-கூறலாம்,



பிள்ளையொன்று இறந்து பிறப்பினும் - சதைப்
பிண்டமொன்று பிறந்து தொலைப்பினும்,
மூப்பினாலோ, நோயினாலோ மடியினும்- அவர்
போரில் கலந்து விழுப்புண்பெறாது இறந்தனர்
என்று பழிச் சொல்லுக்கு ஆளாவர் ஆதலால்
வாள்கொண்டு மார்பில் கீறியபின்பே உடலை
அடக்கம் செய்யும் வீரத்தமிழினம். என்று -

தனது இனத்தின் வீரத்தைப்பாடி, பகைவரின் ஒரு சொட்டுத்தண்ணீரை அருந்தி மானமிழந்து உயிர்வாழ விரும்பாத அந்த வீரத்தனது கையிலிருந்த நீரை பகைவரின் முகத்திலேயேவீசி, தனது மரணத்தை ஆனந்தமாகவே ஏற்றுக்கொள்கிறன் என்கிறது அந்தப்பாடல்.

இந்தப்புறநானூற்றுப்பாடல் பின்னணியில் நாம் ஒருகணம் தியாகவேங்கை திலீபனைவைத்து நோக்கவேண்டும். 21.9 87 அன்று திலீபனின் உண்ணாவிரதத்தின் ஏழாவது நாள், அன்று திலீபனைச்சந்தித்த மத்தியகுழு உறுப்பினர் திரு. யோகி அவர்கள் "நீங்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடவேண்டாம், ஆனால் கொஞ்சமாவது தண்ணீரைக்குடித்துக்கொண்டு தொடரலாம்தானே.?" என்று கேட்டார் அப்பொழுது திலீபன் அவரை சுட்டெரிப்பதைப்போல பார்த்துவிட்டு, "யோகி என்ன பகிடிபண்ணுகிறீர்களா? நான் தண்ணீர் குடித்துக்கொண்டு உண்ணாவிரதமிருக்கப்போவதாக சொல்லியா தொடங்கினேன்..? நான் உயிர்வாழ்வதற்காகஎன்ற கொள்கையிலிருந்து கொஞ்சமும் பின்வாங்கமாட்டன்.. பிளீஸ்.! நீங்கள் என்னை அவமானப்படுத்துகிறமாதிரியிருக்கு!" என்று பதிலளித்தான். ( ஆதாரம் ; தியாகப்பயணத்தில் திலீபனுடன் 12 நாட்கள் பக்கம்: 54 ) அவனுடைய ஆவி பன்னிரெண்டாம் நாள் பிரியும்வரை ஒரு சொட்டுத்தண்ணீர்கூட அருந்தாது, மரணத்தைத்தழுவிக்கொண்டான் தியாகி திலீபன்.

மேற்சொன்ன சங்கப்பாடலில் இரும்பொறையின் மரணம் பகைவனின் தண்ணீரைக்குடிக்க விருப்பமில்லாதவிடத்துத்தான் நிகழுகிறது, ஆனால் திலீபன் பகைவனிடம் சிறைப்படவில்லை, ஒருவேளை அவன் வாழ்வில் அப்படியொரு நிகழ்வு நடந்தால் சைனைட் குப்பியால் சிறைபடமுன்பே தனது மரணத்தைத்தேடிக் - கொண்டிருப்பான். தனது நண்பர்களிடமே ஒருசொட்டுத்தண்ணீரை வேண்டியருந்தாது, தமிழர் வீரத்தினதும, தியாகத்தினதும் பெருமையை உணர்த்திய திலீபன் இரண்டாயிரம் ஆண்டுகளாக நாம பேசிவரும் இரும்பொறையின் மாவீரத்தையும், மானத்தையும்விட பல மடங்கு உயர்ந்து நிற்பதை நாம்காண்கிறோம்.

www.padippakam.com

# மாசாத்தியார் பாடலும் குமரப்பா, புலேந்திரனும்

மாவிலைத் தோரணம்கட்டி, மணவிழா மேடைகட்டி – வாழ்விலே ஒன்றானோம் என்று சொன்ன கணவன் வீரமரணமடைந்துவிட்டானென்ற செய்திகேட்டு அவனின் வீரமனைவி பாடுவதாக ஒரு பாடல் புறநானூற்றில ( பாடல் 279 ) ஒக்கூர் மசாத்தியார் என்றபுலவரால் பாடப்பட்டுள்ளது.

போர்க்களம் போனதந்தை எனக்கு என்னவானதெவந்-தானென அவன்மகன் தாயைப்பார்த்துக் கேட்கிறன்.? அதற்கு அவள் மானம்..!மானம்..!! அழியாதமானமென்று பதில்கூறி:

எதிரிகளின் படையெடுப்பால் நம் குடும்பம் தழை
உதிர்ந்துவிட்ட மரமாகப்போனதடா தம்பீ.!
[illegible] லையில் லை உன்அப்பா
களம்சென்றார் மாண்டார்.!
ஆனாலும், இந்த நிலம் உள்ளவரையில் மானங்காத்தார்!
என்மகனே.! நீயும் தோளில் பலம் உள்ளவரை
பகையைச்சாடு.!பரணிபாடு.!இது உன்தாய்த்திருநாடு!
என்றுகூறி சீவிமுடித்து சிங்காரித்து,
சென்றுவா மகனே..!செருமுனைநோக்கி..!!

என்று மகனையும் போர்க்களம் அனுப்பிவைத்து அந்தாயானவள் பாடுவதாக இப்பாடல் அமைகிறது. இதில் உள்ள வீரத்தைதனது அழியாச்சொத்தாக ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழினம்-போற்றிப்பாதுகாத்துவந்தது, வருகிறது.



இன்று தங்கள் கணவன்மாரை போர்க்களமனுப்பிஅவர் வீரமரணம் எய்தியபின்னரும், தன்மகனை விடுதலைப்புலியாகத் – தயார் செய்தவரும் அதே வீரத்தாய்க்குலத்தை இன்று நாம் ஈழத்தில் கண்முன்னே காண்கிறோம். தளபதி புலேந்திரனின்கதை


படிப்பகம்

மேற்கண்ட நந்த மாசாத்தியார் பாடலுக்கு ஈடாகவும் பெருமைகுறைந்துவிடாது உயர்வுபெற்றே பிரகாசிக்கிறது, புறநானூற்றுப்பாடல் 71 ல் பூதப்பாண்டியன் என்பவன் மனைவி மாலை ஏாடமுன்னரே களம்போய் வீரமரணமடைந்தான் என பாடலொன்றுவருகிறது, இவனின் கதையுடன் தளபதி குமரப்பாவின்வீர மரணத்தை ஒப்புநோக்கிறல் குமரப்பா எழுதியிருப்பது புதிய புறநானூறு என்பது புலனாகும்.

எங்களுடைய பாரம்பரியக் கதைகள் இதுதான்.! வீரத் தமிழனின் பெருமைக்கு இவைதான் சான்றுகளென நாம் மேடைக்குமேடை பேசிவருகிறோம். இருப்பினும் பண்டைய இலக்கியங்கள் வாயிலாக நாம் கவனிக்கவேண்டிய செய்தி ஒன்று இருக்கிறது. அது யாதெனில் தமிழரிடம் இப்படிப்பட்ட வீரமே இருக்க வேண்டுமென்று நமது மூதாதையர் காலகாலமாக எதிர்பார்த்துவந்த வீரத்தின் எல்லைகளே இப்பாடல்களாகும். இதைநாம் இப்பாடல்களை ஆழ்ந்து படிக்கும்போது அறிந்துகொள்ளலாம். இன்று தமிழினத்தின் பண்டைய வரலாற்றை அறிந்துகொண்ட அறிஞர்களெல்லாம் தமிழீழ விடுதலைப்புலிகளின் வீரம் சங்ககால புறத்திணைப்பாடல்களில் காணும் வீரத்தையெல்லாம் விஞ்சிவிட்டதென்ற பெருமனதுடன் விடுதலைப்புலிகளின்வீரத்தை வரவேற்று பாராட்டுவதை நாம் எங்கும் பரவலாகவே கேள்விப்படுகிறோம்.



## காப்டன் மில்லர்

## 401வது பாடல்

இதுவரை காலமும் புறநானூற்றை விஞ்சிய வீரம் தமிழர் வாழ்வில் நிகழவேயில்லையென மேடைக்குமேடை வாதிடுபவர் பலர். வாதங்களை ஒருபுறம் வைத்து, இந்த நானூறு பாடல்களிலும் கரும்புலி காப்டன் மில்லருக்கு உதாரணம் கூறக் கூடியதாக எங்காவது ஒரு வீரப்பாடல் இருக்கிறதா?' எனத் தேடிப்பார்த்தால் உண்மையில் எமக்கு ஏமாற்றமே கிடைக்கும் காரணம் அப்படிப்பட்ட ஒரு மாவீரனை இதுவரை புறநானூறு சந்திக்கவில்லை. ஆகவேதான் மில்லர் கதையைப்பாடலாக இயற்றி, நானூற்றியோராவது பாடலாக புறநானூற்றில்சேர்த்துக்கொண்டால், அதுவே இப்புறநானூற்றுக்குப் பெருமையாகும்.

www.padippakam.com




விரிவஞ்சி இக்கட்டுரையில் சிறு அளவிலேயே உதாரணங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை வீரமரணத்தைத் தழுவிய சமார் அறுநூற்றிற்கும் மேற்பட்ட வீரவேங்கைகள் தமிழன்னையின் வீரவரலாற்றிற்கு விழுதுகளாகத் தோள்கொடுத்துள்ளனர். அடுத்துவரும் தலைமுறைக்கு எழுச்சியூட்டும் புதிய புறநானூறு இன்று ஈழத்தில் எழுதப்பட்டுக்கொண்டிருக்கிறது.

தமிழ்மொழியின் பழம் பெருமையைக் கூறுவதற்காக " கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து, முன்தோன்றி மூத்த தமிழ்.! " என்று குறிப்பிடுவார்கள். இதுபோல இன்று ஒரு புதுமொழி எழுதுவோமாயின் " கல்மறைந்து மண்மறைந்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரப்புகழ் மறையாது.! " என்பதே அது.

************************************************************

## தொடரும் அமைதிப்பணி.







படிப்பகம்

www.padippakam.com

தாயகம் தொழில் நுட்ப அரங்கு ;

# டென்மார்க்கில் பாற்பண்ணைக் கைத் தொழில்..!



## ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்

பாற்பொருள் உற்பத்தி ஏற்றுமதியில் உலக அரங்கில் முன்னணி வகிக்கும் நாடுகளான அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளின் வரிசையில் டென்மார்க்கும் இடம்பெறுகிறது. பாற்பொருள் உற்பத்தியில் இவர்கள் எப்படியாக தமது நாட்டைக்கட்டியமைத்தார்கள் என்பதை டென்மார்க் பாற்பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலைகள் பாவனை (1882-2000) பழையபாற்பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலை என்ற இரண்டு நூல்களின் மூலம் பெரிதும் அறியமுடிகிறது. இது தவிர பாற்பொருள் உற்பத்தியின் நவீனதொழில் நுட்பமுறையிலான வளர்ச்சி நிலைகள் பற்றி தொடர்ந்தேர்ச்சியாக நூல்கள் வெளியானவண்ணமேயுள்ளன.

டென்மார்க்கில் முதல்முதல் 1882ம் ஆண்டு ஜெலிங் என்றஇடத்தில் பட்டர் தொழிற்சாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது இங்கு பாவிக்கப்பட்ட பாற்பொருள் உற்பத்திக்கருவிகள் மரத்தாலும் இரும்பாலும் செய்யப்பட்டிருந்தன. 1882ம ஆண்டுமூன்று பாற்பொருள் உற்பத்தித் தொழிற்சாலைகளுடன் ஆரம்பித்தஇந்நாட்டின் பாற்பொருள் உற்பத்திவரலாறு இன்று நவீன தொழில்நுட்பங்களை தன்னுள் இணைத்துக்கொண்டு வேகமாக வளர்ந்துள்ளது. இதேவேளை டென்மார்க்கின் தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதாக உலகில் வேறுபல நாடுகளிலும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு பெருவெற்றிபெற்றுள்ளன.


இங்கு பாற்பொருள் உற்பத்தி பெருவளர்ச்சி பெற்றதற்கு முதற்காரணி மேற்படி உற்பத்தி சம்மந்தமான சகலவிடயங்களும் ஒரு கல்வியாக போதிக்கப்பட்டுவந்தமையே என்பதாகும். 1889ம் ஆண்டு பாற்பொருட்கள் உற்பத்தி சம்மந்தமாக கல்வி கற்பிப்பதற்காக ஓர் தொழில்நுட்பக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இது தவிர சகல பாற்பண்ணையாளர்களுக்கும் உற்பத்திவிருத்திக்கான வழிமுறைகள் திட்டமிட்டமுறையில் போதிக்கப்பட்டது வேகமான உற்பத்தி வளர்ச்சிக்கு பிறிதோர் காரணமாகும்.

எஸ்.ரீ.அருணன்.



படிப்பகம்

www.padippakam.com



1882ல் ஜேர்மனியில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள்

விரைவானஉற்பத்தி, தரத்தைப்பேணுதல், பக்டீரியாக்களின் தாக்கத்தைத்தவிர்த்தல், போன்ற கருமங்களை உற்பத்தியாளர் சிரமமின்றி மேற்கொள்ள உற்பத்திமுறையை இயந்திரமயப்படுத்தியது, காலத்திற்குக் காலம் நவீன இயந்திரங்களைப் புகுத்தியது என இவர்களின் முன்னேற்றத்தில் ஓர் உறுதியானபடிமுறை வளர்ச்சியைக் காணமுடிகிறது.

பாற்பொருள் உற்பத்தியில் வேகமாக வளர்ச்சிகாண்பதற்காக 1940ம் ஆண்டில் நாட்டிலிருந்த 1690 பாற்பொருள் உற்பத்தித் தொழிற்சாலைகளில் உற்பத்திகுறைந்தவையும், தரங்குறைந்தவையும் மூடப்பட்டு, 65 பாரியதொழிற்சாலைகளாக திட்டமிட்ட முறையில் கட்டியமைத்தார்கள். இவற்றின் உருவாக்கம் பாரிய முதலீடுகளை உள்ளடக்கியதாக அமைந்தது.


பாற்பொருள் உற்பத்தியாளரிடையே போட்டிகளை நடாத்துதல், அரச தரக்கட்டுப்பாட்டாளர்களால் கடுமையான முறையில் தரம் பேணப்படுதல், கண்காட்சிகள், உற்பத்திசம்மந்தமா விசேஷடத்திரைப்படங்கள் என்பன போன்ற நடவடிக்கைகளால் உலகசந்தையில் உற்பத்தித்தரம் குறையாது பேணிவருகின்றனர். கறவைகளைப் பராமரிக்கும்முறை, அவற்றின் உற்பத்தித்தரத்தைப் பேணுதல் போன்ற விடயங்களில் உரிமையாளர்கள் காட்டும் அவதானிப்பு மிகவும் சிறப்பாக உள்ளது. மேலும் விற்பனைக்குக் கொண்டுவரப்படும் பாலின் தரத்தில் நூற்றுக்கு நூறு தரம் பேணப்படுகிறது.

பாற்பொருள் உற்பத்தியாளர்களுக்கு, சங்கங்கள் தாபிக்கப்பட்டு, கூட்டங்கள் நடாத்தப்படுகிறது. பாற்பொருள் உற்பத்திகளை இறக்குமதி செய்யும் பிரதிநிதிகளுடனும் உற்பத்திமுறையிலிருந்தியற்றி மகாநாடுகள் நடாத்தப்படுகிறது. மேலும் இன்று



படிப்பகம்


www.padippakam.com



நவீன தொழில் நுட்பக் கல்லூரி.

உற்பத்தி முறையானது நவீன கொம்பியூற்றர் முறைக்குள்கொண்டுவரப்பட்டுள்ளது. சிறப்பானதோர் வளர்ச்சிநிலையாகும்.

உலகநாட்டின் ஏற்றுமதிச் சந்தையில் பட்டர், சீஸ் என்பனமட்டுமல்லாமல், பலதரப்பட்ட பால் உற்பத்திப் பொருட்களை டென்மார்க் நாடு ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறது.





இந்நிலையத்தில் பட்டர் உற்பத்தி செய்யும் நவீன கொம்பியூற்றர் மூலம் இயங்கும் இயந்திரம்.

பால் உற்பத்தி முறையில் டென்மார்க்கில் கையாளப்படும்தொழில் நுட்பமுறைகளில் பலவற்றை நாம் நமது தமிழீழ மண்ணிலும் கைக்கொள்வதற்கான வழிமுறைகள் பல மிகவும் சாத்தியமாகவேஉள்ளன. இடைவெப்ப வலயம் பாற்பொருள் உற்பத்திக்கு மிகவும் சிறப்பானது இருப்பினும் ஒப்பீட்டு ரீதியாகப் பார்க்கு




படிப்பகம்



சீஸ் உற்பத்தி செய்யும் கருவிகள்.


ம்போது, டென்மார்க்கைப்போலவே நமது மண்ணிலும் பெருமளவு சாதகத்தன்மைகள் தெரிகின்றன. இங்கு குளிர்காலத்தில் கால்நடைகளைப் பராமரிப்பது பெரும்சிரமமாக உள்ளது கால்நடைகள் பெரும்பாதிப்பை எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஆனல்-தமிழீழ மண்ணில் காலநிலை மாற்றங்களின் பாதிப்பு கால்நடைகளில்பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்தமாட்டாது. குறைந்த விலையில் பாற்பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய வழிமுறைகள் ஈழத்தில் நிறையவே உண்டு.




பால் உற்பத்திக்குரிய நவீன கட்டுப்பாட்டுக் கருவிகள்.

டென்மார்க்கின் உதவியுடன் எமதுமண்ணிலும் பாற்பொருட்கள் உற்பத்தித்தொழிலை விஸ்தரிக்க அரியவாய்ப்புண்டு. இன்று உலகின் பல நாடுகளுக்கு டென்மார்க்கிலுள்ள டெனிடா என்ற-அமைப்பு மூலம் பாற்பொருட்கள், தொழில்நுட்பவியலாளர்கள், உற்பத்திக் கருவிகள் என்பவற்றை வழங்கி அந்த நாடுகளின் -பால் உற்பத்தித்துறை சிறப்படைய வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது. மேலும் அந்த நாடுகளால் சிபாரிசு செய்யப்பட்ட தொழில்நுட்பவியலாளர்கள் இந்த நிறுவனத்தின் சார்பிலிங்

www.padippakam.com





## இடைக்காலத்தில் பட்டர் செய்யப் பயன்பட்ட கருவிகள்..

கு பயிற்சிபெற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படுகிறது. இந்த வசதிகளை டென்மார்க் அரசிடமிருந்து நமது மண்ணிற்கும் பெற்றுக்கொள்ள சகல வாய்ப்புக்களும் உண்டு. இதில் டெனிஷ்அரசு தமிழ்மக்களுக்கு உதவுவதற்கு பெரிதும் அக்கறைகொண்டுள்ளது- இங்கு குறிப்பிடத்தக்கது.

எமது மண்ணில் தற்போது இங்குள்ள பாரிய இயந்திரங்களைத்தான் பயன்படுத்த வேண்டும் என்ற தேவைப்பாடு இல்லை டென்மார்க்கில் இடைப்பட்ட காலங்களில் பயன்படுத்தப்பட்ட கருவிகளை நாம் இங்கு குறைந்த செலவுடன் பயன்படுத்தலாம் அந்த உற்பத்திக் கருவிகள்போன்ற அமைப்புடன் பல கருவிகளைப்புதிதாகச் செய்து பல நாடுகளுக்கு அனுப்புகிறார்கள் அதனால் அதனை நாமும் குறைந்த விலையில் கொள்வனவு செய்யலாம், இம்முயற்சியில் குறிக்கப்பட்டளவு வளர்ச்சி கண்டவுடன், அதனைத்தொடர்ந்து நவீன இயந்திரங்களைப்புகுத்தலாம் இதனால் படிமுறையான வளர்ச்சிக்கு மேற்கண்ட உத்திமுறை சாலச்சிறந்ததாகும்.

குறைந்த செலவில் அதிகளவு பாலைத்தரக்கூடிய நல்ல கறவையினங்கள் தற்போது தமிழீழப் பகுதிகளில் வளர்த்துவரப் படுவதாக இருந்தபோதும், மேலும் பல புதியஇனங்களையும் - இங்கிருந்து இறக்குமதி செய்யக்கூடிய வாய்ப்புகளும் உண்டு. இதற்கும் டெனிடா ஸ்தாபனத்தின் உதவியை நாடமுடியும். (தற்போது ஸ்ரீலங்கா அரசுக்கு டெனிடா பல உதவிகளை வேறுபட்ட பல துறைகளில் செய்துள்ளது.)

உலகின் ஏற்றுமதித்துறையில் அதிக வருமானத்தைத் தரக்கூடிய இந்தத் தொழிலை நமது நாட்டிற்கு தொழில் நுட்பரீதியான காரனகளுடன், உட்புகுத்தும்போது, உற்பத்தி, அபிவிருத்திகளில்

ஏ ஏற்றுமதி போன்ற காரனிகளில் நமது தமிழீழ மண்ணையும் முன்னணிப்படுத்த முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

கடடா.

பஞ்சகரன்.




மாதறை மாவட்டத்தில கோட்டேகொட என்றகிராமத்தில் பிறந்தவர ரோகண விஜயவீரா. சிங்கள அரசியல்வாதிகளில் மார்க்சீய, லெனினிசக்கோட்பாடுகளுடன் தோன்றி, இனவெறி, சுயநலம், முதலாளித்துவவாழவு என காலத்தையோட்டிய பெருந்தொகையான சிங்கள இடதுசாரித் தலைவர்களில இவர சற்று தீவிரமான போக்கைக் கடைப்படித்தவர்.

மக்களேயும், அடியாட்களேயும மயக்கக்கூடியவகையில்–வேகமாகவும் கவர்ச்சியாகவும் பேசுவதில் இவர் வல்லமைபெற்றிருந்தார். 1971ல் சிங்கள ஆட்சியை ஆயுதப்புரட்சிமூலமாக கைப்பற்றுவதற்காக ஒர் கிளர்ச்சியை உருவாக்கினா. இப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டது. சுமார் 10.000 க்கும்மேற்பட்டவர்கள் அப்போதய பிரதமர் ஸ்ரீமாவோ அம்மையார்காலத்தில் வீதிகளிலும் ஆறுகளிலும் சுடடுவீசப்பட்டனர். விஜயவீராவும கைதுசெய்யப்பட்டார்.

1977ல "டொம்பச்சய" (பச்சைப்பொய்யன்) எனச் சிங்கள மக்களால் பட்டம் சூட்டிஅழைக்கப்பட்ட ஜே. ஆர்ஆட்சிக்குவந்ததும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு எதர்ச்சக்தியை உருவாக்குவதற்கும், ஐ. தே. க விற்கு எதிரான வாக்குகளேப்பிரிக்கவும் திட்டம் தீட்டி ரோகணவை விடுதலேசெய்தார்.

பெரும்பாலரான கீழைத்தேய மார்க்சீய வாதிகளிற்கே உரித்தான பாணியில் ரோகணவும் பல்டியடித்து, அடுத்துவந்தஜனதிபதித் தேர்தலில் ஜனதா விமுக்த பெரமுனே என்ற கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி தானும் தேர்தலில் போட்டியிட்டார. இதேவேளே கொழுமபுமாநகரசபைககான தேர்தலிலும் இவர்கள்போட்டியிட்டு சில ஆசனங்களேப் பெற்றுக்கொண்டனர். ஜே வி. பீயின உபதீசகமநாயக்கா உட்பட சிலருக்கு மாநகரசபை



படிப்பகம்


யில் பதவி கிடைத்தது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட விஜயவீரா தனது தோல்வியின் பின்னர் தேர்தல் ஒன்றின்மூலம் ஆட்சியைக் கைப்பற்றமுடியும் என்ற நம்பிக்கையை இழந்தார்.

1983 ம் ஆண்டு யூலைமாதம் சிங்களப்பகுதிகளில் வாழ்ந்த தமிழ்மக்களின் வீடுகளின் முகவரிகளையெல்லாம் பூரணமான அட்டவணையாகத் தயாரித்து, ஐ.தே.க ஆரம்பித்த யூலைக்கலவரங்களில் ஏராளமான தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர். சொத்துக்கள் சூறையாடப்பட்டன. இந்த படுகொலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் ஐ.தே.க போட்ட திட்டங்களுக்கு மாறாக சில அரச வாகனங்கள் கொழுத்தப்பட்டன. பொதுச்சொத்துக்கள் சூறையாடப்பட்டன. ஆங்காங்கு திட்டத்திற்கு முரணான ஆயுதப்பிரயோகங்களும் நடைபெற்றன. இவைகளைப் புரிந்தது யார்? ஜே.ஆரின் பார்வை மறுபடியும் ஜே.வி.பி யின் மீது விழுந்தது. எனவே இவர்களின் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டது.


போராட்டத்தைத் தொடர்வதற்குக் காரணங்களைத் தேடிக்கொண்டிருந்த விஜயவீரா இந்தியாவின் அமைதிப்படைரூபத்திலான உளளேற்றத்தைக் காரணமாக வைத்து, மறுபடியும்மிக வேகமாக அரசியல் படுகொலைகளை விவேகமற்றமுறையில்புரியஆரம்பித்தார். முன்னர் இந்தயாவின் உதவியுடனேயே தமிழ்ப்பிரச்சனைக்குத் தீர்வுகாணமுடியுமென்று கூறிய ரோகணவிஜயவீரா அக்கொள்கையை மீண்டும்மாற்றிக்கொண்டார் விளைவு சிங்களப் பகுதியில் நாளொன்றுக்கு ஐம்பதுக்கும் மேற்பட்டபிணங்கள் விழுந்தன.

இவரது கட்சிக்கு வெளிநாட்டுத் தொடர்புகள் இல்லையென்றும், கட்சித்தலைமைத்துவம் மார்க்சிய சித்தாந்தங்களை கசடறப்புரிந்துகொள்ளவில்லையென்றும், மார்க்சீயத்தைச் சிங்களச் சமூகவியலுக்கு ஏற்றவகையில் யதார்த்தமாக மாற்றியமைக்க இவர் தவறிவிட்டாரென்றும் சிலர் தற்போது குற்றம்சாட்டியுள்ளனர்.

முதலில் ஸ்ரீலங்கா போன்ற ஐந்து கட்சிகளின் கூட்டணியைத் தெரிவுசெய்து, அவர்களுடன் ஒன்றுபடுவதாகக் கூறியஇவர் பின்னர் அவர்கள் தரப்பிலும் படுகொலைகளைப் புரியஆரம்பித்தார். முதலில் தனிநபர் கொள்கையைக் கண்டித்த ஜே.வி.பி பின்னர் அக்கொள்கைகளையே வாலாயம் பண்ணியது. (32ம் பக்)



www.padippakam.com



## அமைதிஸ்பெஷல்; காப்டன் காரியப்பா.

நன்றாக இருட்டியபின் துப்பாக்கியை எடுத்துக்கொள்ள வேண்டும். நாலைந்து வெங்காயங்கள் ( ஈ.பீ.ஆர்.எல்.எப் அடியாட்கள்) எரச்சாக்குகளுடன் தயார்ப்படுத்திக்கொள்க.

கடுகு, சீரகம், சின்னவெங்காயம், என்பன குறிப்பிடத்தக்களவு, கொட்டையில்லாப்புளி 150' கிராம், 3தேங்காய் என்பவற்றை பகல் நேரரோந்திற்போது சந்தைகளில் திரட்டிக்கொள்ளலாம்.

ஏலம், உள்ளி, கிராம்பு, வெங்கம்பட்டை என்பவற்றை பலசரக்குக் கடைகளில் பகற் பொழுதே திருடிக்கொள்ளவேண்டும்.



இர... நேரங்களில் அமை திப்படை மு... காரியாலயத்திற்கு பதுங்கிப் பதுங்கியபடி வந்து சேரும் நமது ஈ ரோஸ் நண்பர்களிடம் செத்தல்மிளகாயை கொடுத்தால், நன்றாகப்பட்டுப் போல அரைத்துக்கொடுப்பார்கள். ... இம்மிக்கு இன்று ... ப்பட்ட தமிழனின் ... பயன்படுத்திக் கொள்ளலாம். சின்ன வெங்காயத்தை டெலோக்காரரிடம் கொடுத்தால் நன்றாகத் தோலுரித்து நறுக்கிக் கொடுப்பார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இவற்றை யுத்தம் செய்தபின்னர் வரதராஜப்பெரு-மாளிடம் வாக்கி டோக்கியில் தொடர்புகொள்க. காரணம் கோழிகள் எங்கெங்குவளர்கின்றன, வாத்துகள் எங்கு வளர்கின்றன என்றவிடயங்களெல்லாம் அவருக்கேதெரியும். (குறிப்பு, குருமா செய்வதை மட்டும் அவரிடம் சொல்லிவிடலாகாது,- கோழிகள் இருக்குமிடத்தைமட்டுமே வினவுக. குருமாக்கதைதெரிந்தால் அவர் விசேடவிமானத்தில் வந்து இறங்கித்தொலைத்துவிடுவார், அப்புறம் விடயம் பேஜாராகிவிடும்.)

தலையை எடுத்தபின் குறிப்பிட்ட வீட்டிற்குள் பதுங்கிப் பதுங்கி செல்க, கோழிக் கூட்டிற்குள் புகுந்து "லபக்லபக்" என கோழிகளை பிடித்துப்பையில்போடுக. இந்த நேரம் வீட்டுக்காரர் எழுந்தால் ஒரே சூட்டில் மேல்உலகம் அனுப்பவேண்டும் காரணம் அவர்கள் புலிகள். கோழிகளுடன் திரும்பும் - போது, ஈ.பீ, பேர்வழிகள் நடுவழியில் கோழிப்பையை சுருட்டிக்கொண்டு, இயக்கத்தைவிட்டே விலகி ஓடிவிடுவார்கள். ஆக-வே அவர்களையும் கவனமாக கோழிகளுடன் முகாமிற்குஓட்டி வரவேண்டும்.

பகலில் தலையாட்டி வேலைசெய்துவிட்டு இரவில்கஞ்-சா அடித்துக்கொண்டிருக்கும் காய்களிடம் கோழிகளைக்கொடுத்தால் கழுத்தைமுறித்து உரித்துக்கொடுப்பார்கள். இதன்பின் சட்டியை அடுப்பில் ஏற்றி சிறிதளவு பட்டரில் உரித்தவெங்காயம், உ. கிழங்கு என்பவற்றை நன்றாகவதக்கவும். பின் அரைத்த மிளகாயையும், நன்றாக துண்டுதுண்டாக நறுக்கிய கோழிகளையும் சிறிதளவு உப்பில் பிரட்டி பொன்போல வறுக்கவும். வெங்காயம் சிறிதளவு, மல்லி சரக்குப்பொருட்களை கடைசியாகக் - கொட்டவும். இறுதியாக கரைத்த புளியை அதன்மேல் ஊற்றி, முறுவலாக வறுத்தெடுக்கவும். புளொட் காரரிடம் ஒடுக்குப் பட்டைச்சாராயத்தை வழமைபோல பெற்றுக்கொள்க.

## ஜே.வி.பீ......

ஆக ஜே.வி.பீ யின் கொள்கைதான் என்ன? தாங்கள் பதவிக்குவரவேண்டும் என்பதற்காக காலத்திற்குக் காலம்தமது சித்தாந்தங்களை அடிதலையாக மாற்றி, சுயநலப்பாதையில்- தொழிற்பட ஆரம்பித்தனர் இதுதான் ஜே.வி.பீயின் சறுக்கலுக்கு பிரதானகாரணமெனலாம். கடைசியாக ரோகணவின் கைதும் அவரது கொள்கைபோலவே முரண்பாடு நிறைந்து காணப்படுகிறது. ஜே.வி.பீகாரர் உயிருடன் பிடிபடும்போது சைனைட் அருந்தவேண்டுமென்று விதியிருந்ததாக செய்திகள் வெளிவந்தன. சி-லர் சைனைட் அருந்தியுமிருந்தார்கள் ஆனால் ரோகண உயிருட-னேயே கைதுசெய்யப்பட்டு பின் அரசால் கொல்லப்பட்டிருக்கிறார்.

இவையெல்லாம் எப்படியோ சிவப்புத்தத்துவங்கள்பேசி தற்போது பதவிக்காக கூல்டியடித்துள்ள பல தமிழ் இயக்கங்களுக்கு இச்சம்பவம் நல்லதோர் பாடமாக அமையுமென்பதில் ஐயமில்லை.



படிப்பகம்

www.padippakam.com






இந்தியப் படையினதும் கைக்கூலிக்குழுக்களினதும், ஆக்கி-
ரமிப்பு இன்று தமிழீழத்தின் மூலை முடுக்கெங்கும் கோரதாண்ட
வமாடிவருகிறது. சர்வதேச செய்தித்தாபனங்களுக்கு அங்கிருந்து
சரியான தகவல்கள் கிடைப்பதில்லை. இந்திய ஊதுகுழல்களின் -
போலி ஒப்பாரிகளே பெருமளவு செய்திகளாக வருகிறது.
(உதாரணம்; பிரபாகரன் சுடப்பட்டார் என்ற செய்தி போல
வரும் வதந்திகள்.) ஆனால் ஒவ்வொரு கிராமங்களிலும் அங்குவா
ழும் ஒவ்வொரு குடும்பத்தினர்க்கும் ஏற்படும் இந்திய ஆக்கிரம
ப்புத் தொல்லைகள் ஈழத்தில் தங்களது உறவினர்கள் எழுதும்-
கடிதங்கள் மூலமும் சரியான நிகழ்வுகளாக இங்கு வருகிறது.
உங்கள் கடிதங்களில் வரும் இந்திய, கைக்கூலிகளின் ஆக்கிரமிப்பு
ச்செய்திகளை தனியாகப்பிரித்தெடுத்து தாயகத்திற்கு அனுப்புங்
கள். உண்மை நிலைகளை அறிய அவைபெரிதும் உதவுமென நம்பி
இப்பகுதியை ஆரம்பித்துள்ளோம்.

கரவெட்டி.

"....நாங்கள் சந்தைக்குப் போனபோது இந்திய-
அமைதிப்படையும் ஈ.பீ காறரும் துப்பாக்கிமுனையில் எங்களை
அழைத்துச்சென்று, வீதியோரமாக நிறுத்தினர். பின் அங்கு சந்தி
யில் கடை வைத்திருக்கும் இருவரை இழுத்துவந்து இந்த விடுத-



படிப்பகம்

www.padippakam.com

லைப்புலிகள் ஆதரவாளர்களை நாம் சுடப்போவதை எல்லோரும் பாருங்கள். என அவர்களில் ஒருவன் சத்தமாகக் குரல்வைத்தான், பின்னர் அந்த இரு அப்பாவிகளையும் மக்கள் முன்னிலையிலேயே சுட்டுக்கொன்றனர். விடுதலைப்புலிகளை யாராவது ஆதரித்தால் அவர்களுக்கும் இதுதான் கதியென எச்சரித்துச் சென்றனர்..."

வல்வெட்டித்துறை.

"....எங்கடை வீட்டை இந்தியப்படையினர் பத்துத்தடவைக்குமேல் வந்து சோதித்து துன்புறுத்தினார்கள். அக்காவின்-ஒருவயதுப்பிள்ளையையும் தாக்கினார்கள். அம்மாவுக்கு மூன்று தட-வைகள் துப்பாக்கியின் பின்புறத்தால் அடித்தனர். சாந்தன்போன்ற சிறு பெடியளையெல்லாம் பிடித்துக்கொண்டுபோய் சந்தி-யில் வைத்து சுட்டார்கள். கடைகளெல்லாம் எரித்துவிட்டார்கள் உணவுப் பொருட்கள் எடுப்பது பெரும் கஷ்டம். நேற்றும் ஒரு பெடியனை சந்தியில் வைத்துச்சுட்டார்கள். சந்தியைப் பார்த்தால் பயம்தான்வரும் முன் ஒருபோதும் இல்லாத பேரழிவு.!

திருமலை.

".....கடிதங்களை எழுதும்போது இனி அரசியல்பற்றி எழுதவேண்டாம். நேற்று ஈ.பீ.ஆர்.எல்.எப் காறங்கள் தபால் கந்தோருக்குள் புகுந்து, சகல வெளிநாட்டுத் தபால் பொதிகளையும் அள்ளிச்சென்றுள்ளனர்..."

சுழிபுரம்.

".....ராஜீவ் காந்தி தோற்றுப்போனால் இங்கை -கசிப்பு வித்துத்திரிஞ்ச சில டெலோக்காறர் கவலைப்பட்டுத்திரியினம். இந்தியன் ஆமி நாட்டைவிட்டுப்போனால் சனங்களே தங்களுக்கு பாடைகட்டிப்போடுமெண்டு பயப்பிடுகினம் இனித்தான்-வேடிக்கை நடக்கப்போகுது..."

---

சிறுகதைக் கருத்துத் தாக்கமோ...!

தங்கள் ஆக்கங்களை அனுப்பிவையுங்கள்- நன்றிகள்;


********************************************

| THAYAKAM, | THAYAKAM, |
|---|---|
| P.O.BOX : 133, | P.O.BOX : 47, |
| 7400 HERNING, | 7600 STRUER, |
| DENMARK. | DENMARK. |

********************************************




படிப்பகம்

www.padippakam.com



# சின்ன நிலவுகளின் வண்ணக் கனவுகளில்

குஹின் பராண்ஸ்

சின்னச் சின்ன
நிலவுகள் கூட
ஆயுதம் ஏந்துகின்றன —
இனி
அமாவாசை இருள்களுக்கு
அஞ்ஞாத வாசம்தான்

நடுக்கடல் சூறாவளியில்
கட்டு மரங்களில்
எம்மை
தவிக்க விட்டு விட்டு
தொலை தூர கரைகளில்
எங்கோ
தப்பித்துக் கொண்டனர்
மீகாமன்கள்.

வேர்கள் எரிகையில்
இவர்கள்
கிளைகளுக்கு
பூச்சூடிக் கொண்டிருந்தனர்.

தேர்தல் காலத் திருவிழாக்களில்
இவர்கள்
சட்டைப் பைகளில்
அள்ளக் குறையாத
அட்சயபாத்திர வாக்குறுதிகள்.



படிப்பகம்

www.padippakam.com

எங்கள் கைகளில்
என்றைக்குமே
பிச்சைப் பாத்திரங்கள்தான்.



இந்த
முகமில்லாத மனிதர்கள்
காலத்துக்கு ஒன்றாய் ....
மேடைக்கொன்றாய் ....
ஆளுக்கொன்றாய் .....
வேஷம் போடும்— இவர்கள்
முகமில்லாத மனிதர்கள்.

அந்த
மேடை வானங்களின்
வார்த்தை மழைகளில்
எங்கள் மன வயல்கள்
நனைந்ததென்னவோ உண்மைதான்.



பின்னர்தான் தெரிந்தது
அது — வெறும்
கானல் மழையென்று..

இதனைத்தான்— இன்று
சின்னச் சின்ன
நிலவுகள் கூட
ஆயுதம் ஏந்துகின்றன—
இனி
அமாவாசை இருள்களுக்கு
அஞ்ஞாத வாசம்தான்.

தமிழீழ விடுதலைப்
புலிகளின் குரல்



07 840225
07 402154



படிப்பகம்

www.padippakam.com

# துரோக ஒரு தூண்டில்.



தூண்டில் என்ற பெயரில் தமிழ் சஞ்சிகையொன்று மேற்கு ஜேர்மனியில் தென்னாசிய நிறுவனம் எனப்படும் ஓர் ஸ்தாபனத்தால் வெளியிடப்பட்டு வருகிறது. மதமாற்றத்திற்கு ஒத்துழைப்பது, இனத்தைக்காட்டிக் கொடுப்பது, தமிழீழ விடுதலைப்போராட்டத்தைக் கேவலப்படுத்துவது, போன்ற விபச்சார எண்ணமிக்க தமிழர்கள்பலர் இதில் கூடுகட்டியுள்ளனர்.

"மனிதம் எங்கே?" என்று தலைப்பிட்டு, தலையங்கமொன்று தீட்டி, இநத இதழ் மூலம்மேற்படி இந்த விபச்சாரத்தமிழர்கள் விஷத்தைக் கக்கி தமிழீழ விடுதலைப்போராட்டத்தை கொச்சைப்படுத்தியுள்ளனர். இவர்களால் எழுதப்பட்ட துரோகக் கருத்துக்களைதொகுத்துத் தருகிறோம்.

1. இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதில் ~~மக்கள~~ மக்கள் இன்று ஆவேசமாகஇறங்குவதேன்? இவர்களின் இந்தத்தைரியம் விலைகொடுத்துவாங்கப்பட்டதா? அல்லது பலவந்தமாக [redacted]ட்டப்பட்டதா?

2. ரெலோவை புலிகள் அழித்தபோது மௌனமாகஇருந்தமக்கள் இப்பொழுது ஆவேசமாக இந்திய அமைதிப்படையைமட்டும்தான் எதிர்க்கவேண்டும்?

3. கொலைகாரருக்குத் தேவையானபணம் ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ், இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளிலுள்ள தமிழர்களிலுல்தான் வழங்கப்படுகிறது. இது மிகவும் தவறான செயல்.

4. இங்கே சுகமாகவாழ வேண்டும் என்ற காரணத்திற்காக தாராள உதவி செய்து ஈழத்தில் நடக்கும் கொலைகளை உற்சாகப்படுத்தாதீர்கள்

5. நாம் ஈழப்போராட்டத்தில் எந்த விதத்திலும் பங்கெடுக்காத தவற்றைத்தான் செய்துவிட்டோம். ஆனால் இன்று பலரிடம் விடுதலைவேட்கையை நேசிக்கும் உணர்வு கொழுந்துவிட்டெரிகிறது. ஆனால் தற்பொழுது அந்த நெருப்பு இருட்டில் ஒளிந்து கொண்டுள்ளது. ஈழத்தைச்சுற்றி எல்லை போடுவதல்ல பெரிய காரியம், படு - கொலைகளைத்தடுக்கும் ஒரு

எஸ். [illegible]. மே. ஜேர்மனி.



படிப்பகம்

www.padippakam.com

போராட்டத்திற்கு எம்மைத் தயார் செய்வோம்.

மேற்கண்ட கோமாளித்தனமான கருத்துக்களை முன்வைத்து, மனிதத்தை நேசியுங்கள்! என்று மேற்கு ஜேர்மனியிலிருந்து இவர்கள் தமிழர்களை நோக்கி குரல் கொடுத்துள்ளார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளை மறைமுகமாகச் சாடுவதே இவர்களின் கபட நோக்கம். இது குறித்து மேற்கு ஜேர்மனியிலிருந்து எ[illegible]லிக்ஸ் என்பவர் மேற்படி துரோகிகளுக்கு அனுப்பிய கண்டனக் கடிதத்தின் சில பகுதிகள் கீழே தரப்படுகிறது.

தூண்டில் என்ற தங்கள் துரோக ஏட்டில் மனிதம் எங்கே என்று கேட்டு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கேலி செய்து, நீலிக்கண்ணீர் விட்டிருந்தீர்கள். தற்பொழுது மனிதம் எங்கே கடைப்பிடிக்கப்படுகிறது என்ற கேள்விக்கு தங்களால் சரியான பதில் தரமுடியுமா? ஏகாதிபத்திய நாடுகளாயினும், கம்யூனிச நாடுகளாயினும் இன்று தேடமுடியாத நிலையில்தான் மனிதம் சங்கடப்படுகிறது. இந்த நிலையில் பாசிசத்தின் காவலனை ராஜீவ் காந்தியிடம் மட்டும் நீங்கள் மனிதத்தை காண்பதாகக்கூறியிப்பது வேடிக்கையான செயல்.

இப்பொழுது தமிழீழமெங்கும்
EROS பெருமையுடன் வழங்கும்
ஒவ்வொரு அரங்கிலும் வெவ்வேறு
கதைகளுடனும்
மூன்றுமுகம்
இது ஒர் ஸ்டண்ட் சித்திரம்



படிப்பகம்

www.padippakam.com



# புலிக்கொடி பறந்திடுமோ எந்நாளைக்கு?

மக்களே..!

இதோ இந்த யாழ்ப்பாணக் கோட்டையைப் பாருங்கள்; இந்தக் கோட்டையில் இதுவரைகாலமும் அன்னியக்கொடிகளே பறந்துகொண்டிருக்கின்றன.! எப்போது இக்கோட்டையின்மீது புலிக்கொடி பறக்கிறதோ..? அப்பொழுது தான் எம் மக்களுக்கு விடுதலை கிடைத்த நாள்...!

– தியாகி திலீபன் –

நீங்கள் தற்பொழுது சுக போக வாழ்வு வாழ்வது மேற்கு ஜேர்மனியில். தற்போது இங்குள்ள தமிழர்களின் நிலை யென்ன? ஆறுமாதகால வீசா அவர்கள் இந்த நாட்டில்வாழ கிடைத்திருக்கும் அனுமதிஎல்லை ஒரு நகரத்தைவிட்டு இன்னோர் நகரத்திற்குப் போகத்தடை.! மாறாக அனுமதியின்றிப் போனால் தண்டனை. இப்படிப்பட்ட விதிமுறை 19ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் கண்டியரசனால் கடைப்பிடிக்கப் பட்டதாக வரலாறு கூறுகிறது இதை நாம் இருபதாம் நூற்றுண்டின் இறுதி தசாப்தத்தில் ஜேர்மனியில் அனுபவிக்கிறோம்! இந்த இழிசெயல் மனிதத்திற்கு புறம்பான செயல் என்பதுஉங்களுக்குப் புரியவில்லையா? சுயநல மிகுதியால் புறமுதுகிட்டு ஓடிவந்த கோழைகள் என்று, உங்களை நீங்களே கூறுகிறீர்கள் (நன்றி) துரோகிகளே.! முதலில் உங்களைச் சுற்றிப் போடப்பட்டுள்ள இந்த அடிமைவேலியை முதலில் கண்திறந்து பாருங்கள். ஈழத்திற்காக முதலை கண்ணீர் வடிக்காதீர்கள்.

ரெலோ ஒரு கைக்கூலி அமைப்பென்பதை தற்போது முழு உலகமுமே தெரிந்துகொண்டுவிட்டது. அவர்களை விட்டுவைத்திருந்தால் தற்போதை. பீ.ஆர்.எல்.எப் துரோகிகள் செய்வதைத்தான் அவர்களும் செய்திருப்பார்கள். அதைமக்களுணர்ந்து கொண்டதால்தான் முன்பு அதுபற்றி பெரிதாகஅலட்டிக்கொள்ளவில்லை. இன்றுஇந்திய இராணுவம் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் என்பதுஉலகறிந்த உண்மையாகிவிட்டது.

இத்தகைய அநீதிகளை சுதந்திரஉணர்வுள்ள எந்த மக்களும் எதிர்ப்பார்கள். மானங்கெட்டு ரோசமிழந்து, இனத்தை, மதத்தை விற்றுப்பிழைக்கும் உங்களுக்கு இது தவறாகத் தெரிவதில் புதுமை ஒன்றுமில்லை.

தமிழீழ விடுதலைக்கு நிதியளிப்பது உயிர்க்கொலைக்கே பயன் படும் என நீங்கள் வாதிடுகிறீர்கள். இவ்விதம் தமிழீழ விடுதலைக்கு நிதியளித்து உற்சாகப்படுத்துவது தவறு என்றும் நியாயம் கற்பிக்கிறீர்கள். தங்களைப்போல போலி நிறுவனங்களினூடாகப் பணம் அனுப்பினால் நீங்கள் வாயில் போட்டது போக, மிகுதி மதமாற்றத்திற்கும், சிங்களக்குடியேற்றத்திற்கும், திருட்டு அமைப்புக்களுக்கும்தான் போய்ச்சேரும்



படிப்பகம்

www.padippakam.com

என்பதை உணர்ந்துகொண்டுதா
ன் இங்குள்ள பெருந்தொகை-
யான தமிழர்கள் உங்களது -
போலிக்கருத்துக்களுக்கு விலை
போவதில்லை. அதனால் உண்டா
னவருத்தத்தினால் உங்களைப் -
போல புலம்புவபர்களை மே
லைத்தேயங்களில் ஆங்காங்கு-
காணமுடிவது உண்மைதான்.

ஈழப்போராட்டத்திற்கு-
எல்லை போடுவதல்ல பெரிய
காரியம் என்று கூறியதன்மூலம்
தமிழீழத்தை நீங்கள் விரும்பவி
ல்லையென்பதை தெளிவுபடுத்தி
யுள்ளீர்கள். உலகம் முழுவதும்
நாடில்லாது வாழும் ஓரினமா
ன தமிழினத்திற்கு ஒரு தனிநா
ட்டை உருவாக்கவேண்டும் என்
பதற்காக தம்மாலியன்ற உத
விகளை செய்தவர்களையும்,
அதற்காகப் பாடுபட்டவர்க-
ளையும், ஐரோப்பிய நாடுகளி
ல் உள்ள நவீன அடிமைகளான
உங்களைப்போன்ற துரோகிக
ளிகாட்டிக்கொடுத்தமையால்-
தான் எமது சகோதரர்பலர்
ஐரோப்பியச் சிறைகளில்வாட
வேண்டிவந்தது என்பதையும்மற
ந்துவிடாதீர்கள்.

மனிதத்தைத் தேடும்நண்ப
ர்களே.! படுகொலைகளைத்த
டுக்க போராடப்போவதா
கக் கூறும் நண்பர்களே.! ஒரு
காலத்தில் கிறீஸ்தவ மதம்பல
பிரிவுகளாகப்பிரிந்து, தம்முள்-
மோதியதால் ஐரோப்பியவர
லாற்றில் ஏற்பட்ட சிலுவையுத்
தங்களையும், அதனால் வடிந்த-
இரத்தங்களையும் நீங்கள்அறிய
வில்லையா? புதிய சிலுவையுத்
தமொன்றிற்கு பூபாளம் பாடு
ம்கோமாளிகளே.! நீங்கள்
ஒருபோதும் வரலாற்றை அறி
யமாட்டீர்கள். காரணம், நீங்க
ள் சந்தர்ப்பவாதத்திற்குள்புகு
ந்து சுகம்தேடும் கோழைகள்.
உங்களுக்கு எதற்கு வரலாறு?
மனிதத்தை நேசிக்கும் மனிதன்
சுதந்திரம் தனது பிறப்புரிமை
என்பதை முதலில் புரிந்துகொ
ள்ளவேண்டும். பிச்சை உணவை-
நக்கி, தங்கக்கூட்டுக்குள் சிறகி
ழந்து வாழும் உங்களுக்கு சுத
ந்திரப் பறவைகளைப் பார்க்
கும்போது இப்படித்தான் கத்
துக்குட்டித்தனமாக எண்ணத் -
தோன்றும். நண்பர்களே விடுத
லை உணர்வு விலைகொடுத்து-
வாங்கப்படுவதல்ல, விலைகொ
டுத்து வாங்கப்படக் கூடியவர்
கள் உங்களைப்போன்ற அடி-
மைகளும் விபச்சாரிகளுமே.!
என்பதை மறந்துவிடாதீர்கள்!
துரோகிகளே.! தமிழினவர-
லாற்றில் நீங்கள் தொலைந்து
போர்க்கங்கள்.

இந்தியச் சுதந்திரமும்
தன்னையும் சுதந்திரமும்.!


மேற்படி தொடர் கட்டுரை
அடுத்த இதழில் வெளிவரும்.

தாயகம் மொழிபெயர்ப்புப் பிரிவு.



படிப்பகம்


www.padippakam.com



## கொண்டுவான் சூர்மையான்.

### கைப்பொம்மைகள் கதை....?

வரதராஜப்பெருமாள் தலைமையில் இந்தியஅரசு ஒருபொம்மையரசை உருவாக்கியபின்னர், உலகவரலாற்றுச்சுவடிகளிலிருந்து கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட பொம்மையரசுகளின் கதியென்னவானது; என்பதையறிய நிறைந்த ஆவல் தமிழ் மக்களிடையே முகிழ்த்துநிற்பதை இன்று பரவலாகக்காணமுடிகிறது. இக்குறிப்புரையில் இலங்கை வரலாற்றிலிருந்து, ஒரு கைப்பொம்மை அரசனது கதை தரப்படுகிறது.





படிப்பகம்

www.padippakam.com

இலங்கை வரலாற்றில் முதல் முதலில் முடிசூடி அரசனானவன் தேவநம்பியதீசன். ஆங்கிலேயர் காலத்தில் இறுதியாக இலங்கையை ஆட்சிசெய்து, ஆங்கிலேயரால் கொலைசெய்யப்பட்டவன் ஸ்ரீவிக்கிரமஇராஜசிங்கன். தேவநம்பிய தீசன் முதல் ஸ்ரீவிக்கிரமஇராஜசிங்கன் காலம்வரை இலங்கை வரலாற்றில் பலதரத்திலிருந்தும், ஏராளமான மன்னர்கள் சிம்மாசனத்திலிருந்திருக்கிறார்கள். இவர்களில் வீரர்கள் உண்டு, கோழைகள்உண்டு, கோரமானவர்கள் உண்டு, நல்லவர்களும் உண்டு ஆனால், " இலங்கையின் வரலாற்றில் பரிதாபத்திற்குரிய மன்னன்.! " என்று சகலவரலாற்றாசிரியர்களாலும் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டவன் டொன்யுவான் தர்மபாலன் என்ற அரசனாகும்.

கி.பி.1505 ல் போர்த்துக்கேயர் இலங்கைவந்தபோது புவனேகபாகு என்ற அரசனுக்கும், அவனது தம்பியாகிய மாயாதுன்னைக்கும் பதவியை யார் கைப்பற்றுவது என்பது தொடர்பாக கடும்போட்டியிருந்தது. வீரம்மிக்க மாயாதுன்னைக்கு அஞ்சி, தனது ஆட்சியைப் பாதுகாத்துக்கொள்வதற்காக புவனேகபாகு போர்த்துக்கேயரின் கால்களில் விழுந்து, தனது பதவிக்காக இலங்கையில் முதலாவது ஐரோப்பிய இனத்தவர் காலடி எடுத்துவைக்க இடம்கொடுத்தான்.



சிங்கள அரசவம்ச ஆட்சியின்படி; ஒருவன் அரசனாக இருந்தால் அவனுக்கு அடுத்தபடியாக அரசனாக வரவேண்டியவன் – அவனின் தம்பி. இவனை `யுவராஜா' என்று அழைப்பர். இவனுக்குப் பின் அரசனாக வரவேண்டியவன் இவனுடைய தம்பி. இவனை `ஆபா' என்று அழைப்பார்கள். இவ்விதம் சகோதரர்கள் இல்லாதவிடத்து, அல்லது இவர்களின் ஆட்சி முடிவடைந்த பின்னரே அரச



படிப்பகம்

வின் மூத்த மகன் அரசனுவான். எனவே முறைப்படி புவனேகபாகுவிற்குப்பின் யுவராஜாவாக இருந்த மாயாதுன்னேயே அரசனுகியிருக்கவேண்டும், ஆனல் புவனேகபாகு போர்த்துக்கேயரின் உதவியுடன் தனது மகன் தர்மபாலனை முறையற்றவிதத்தில் அரசனுக்கினுன். தர்மபாலனது சிலையை தங்கத்தில் செய்து, போர்த்துக்கல் அனுப்பி, அப்போதைய போர்த்துக்கல் அரசன் 3ம்ஜோனை க்கொண்டு அச்சிலைக்கு முடி சூடுவித்தான், என்று வரலாறுகூறுகிறது.

தங்களுடைய மேலாதிக்கம் இலங்கைமீது பூரணமாகவிழுவதற்கு இச்சந்தர்ப்பத்தை போர்த்துக்கேயர் நன்கு பயன்படுத்தினர். ஆட்சிக்கு எந்தவிதத்திலும் தகுதியில்லாத, சபலசித்தனுன தர்மபாலனை கிறீஸ்தவமதத்திற்கு மாற்றி, அவனது பெயரை - டொன்யுவான் தர்மபாலன் என திருத்திக்கொண்டனர். இவனை சகல வசதிகளும் செய்து, அரண்மனையில் வைத்துக்கொண்டு, அவன்பேரில் தங்களது சுரண்டலை வெற்றிகரமாக நடாத்தத்தொடங்கினர்.

அன்னியர் வெளியேற வேண்டுமென்ற, சுதந்திர வேட்கை இக்காலத்தில் நாடுமுழுவதும் கொழுந்துவிட்டெரிந்தது. இதை அடக்குவதற்கு போர்த்துக்கேயர் சகலவகைகளிலும் அராஜகங்களை கட்டவிழ்த்துவிட்டனர். தனது நாட்டில், தன்னுடையபெயரில் அன்னியர் புரியும் அக்கிரமங்களை தெரிந்தும் அதற்கு ஒருவிதத்திலேனும் மறுப்புத்தெரிவிக்க அவன் வல்லமையற்றவனுகஇருந்தான். போர்த்துக்கேயரின் அடாவடித்தனங்களை நியாயப்படுத்தும் கூற்றுக்களையே வெளியிடவேண்டிய நிலையிலிருந்தான். (89 ஆகஸ்ட் வல்வையில் 71 அப்பாவிப்பொதுமக்கள் கொலை செய்யப்பட்டபோது; இந்த இந்தியப்படுகொலைகளைப் பார்வையிட்ட வரதராஜப்பெருமாள் இவைகள் 1983 யூலைக்கலவரங்களின்போது நடைபெற்ற சம்பவங்களென அறிக்கை வெளியிட்டு தனது - அறிவின் சிறப்பையும், இந்தியாவின் அமைதிப்பணியின் பெருமையையும் விளக்கியதுபோல.) விருந்துபசாரமொன்றின்போது இவனுக்கு வழங்கப்பட்ட நஞ்சால் பற்களையெல்லாம் இழந்த தெத்துவாயனுக மாறினுன்.

மக்கள்முன் சுதந்திரமாகத் தோன்ற இவனுக்கு முடியாதிருந்தது.

அன்னியப்படைகளின் பாதுகாப்பில்லாவிடில் மரணபயம்- எந்தவினுடியும் அவனை அருகில் நின்று அச்சுறுத்தியது.

போர்த்துக்கேயருக்கு மாருக ஒரு கருத்துச்சொன்னுல், ஊக்கத்திலேயே அவனுக்கு மோட்சம் கிடைத்துவிடும்.


நாட்டில் என்ன நடக்கிறது? இனிஎன்ன நடக்கப்போகிறது? என்பது எதையும் அறியமுடியாதவனுக தங்கக்கூட்டில் அடைபட்ட கிளியாக தத்தளித்தான்.

அதிகாரமற்ற கைப்பொம்மையான தனது வாழ்வை - நினைத்து தினசரி கண்ணீர்வடித்தான்.

www.padippakam.com



**IPKF நிரந்தர அமைதிக்காகப் பாடுபடும்!**
**- ராஜீவ் -**




கடைசியாக ஒருநாள் போத்துக்கல் அரசனுக்கு, மன்றாட்டமாக ஒரு கடிதத்தை எழுதினான். அக்கடிதத்தில் தனது நாட்டை போத்துக்கேயருக்கே எழுதித் தருவதாகவும், தனக்கு கறுவா முதலிய வாசனைத்திரவியங்களை இலங்கையிலிருந்து போத்துக்கல்லுக்கு ஏற்றிச் சென்று வியாபாரம் புரிய ஒரு கப்பலை மட்டும் தந்தால் தான் அரச பதவியிலிருந்து ஒதுங்கிவிடுவதாக கேட்டுக்கொண்டான். இதற்குப் போத்துக்கேயர் இணங்கவில்லை, காரணம் உண்மையில் இராட்சிய பரிபாலனம் போத்துக்கேயர் கைகளிலேயே இருந்தது. சரியானமுறையில் தெரிவுசெய்யப்படாத ஒரு கைப்பொம்மைக்கு ஆட்சியைத் தாரை வார்க்க எந்தவித உரிமையும் கிடையாது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

மனித வாழ்விலேயே கேவலமான வாழ்வு, இழிவானவாழ்வு, ஒரு கைப்பொம்மையினுடைய வாழ்வுதான் என அவன்தனது இறுதிக்காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்தபோது வருத்தமாகப் பேசிக்கொண்டான். இருப்பினும் அவனுள் ஒரு கோபம் தனது நாட்டு மக்கள் தன்னை ஒரு துரும்பாக மதிக்கவில்லையேயென்ற வருத்தத்தால் வெதும்பினான். இறுதியாக ஒருநாள் திடீரெனதனது இராட்சியத்தை போத்துக்கேயருக்கே எழுதிவைத்துவிட்டு, மரணமானான். அன்றிலிருந்து இலங்கையின் வரலாற்று ஏடுகளில் இந்தக் கைப்பொம்மையின் கதையே பரிதாபகரமான பக்கங்களாகப் பேசப்படுகிறது.

மிஸ்டர் வரதராஜப்பெருமாள் உங்கள் நிலையும் தற்போது டொன்யுவான் தர்மபாலவைவிட பரிதாபகரமானது — என்பது இப்பொழுது உலகறிந்தவிடயமாகிவிட்டது.

www.padippakam.com

தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க்கிளை ஆதரவில்:
ஈழத்தமிழர் கலையரங்கம் டென்மார்க், அளிக்கும்

# முத்தமிழ் விழா.





நமது பாரம்பரியக் கலைகளை
புதிய தலைமுறைகளின்
நினைவுகளிலிருந்து
அகலவிடாது காக்கும்
அரிய நிகழ்ச்சி.

காலம் : 19-20-01-1990 HERNING

வெள்ளி; 17.00 மணி

சனி ; 15.00 மணி

HERNING GYMNASIUM;
H.P.HANSENS VEJ 8

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்!

புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்!!

படிப்பகம்

www.padippakam.com



"நாம் குருட்டுத்தனமாக எந்த
அந்நியப் புரட்சி வடிவங்களையோ,
புரட்சித்தத்துவத்தையோ, அன்றிப்
போர் தந்திரோபாயங்களையோ
பின்பற்றவில்லை"

தமிழீழ விடுதலைப்புலிகள்

படிப்பகம்